பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2056 வைகாசி 08 வியாழக்கிழமை 22.05.2025 கதிர் 194

### இது ரகசியம் அல்ல!

உள்ளூராட்சி சபைகளில் ஆட்சிப் பலத்தை நிரூபிக்க இன்னும் 10 நாள்கள்தான் இருக்கின்றன. இதற்கிடையில் பல சபைகளில் தங்கள் பலத்தை அங்கு ☞ 2

# தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்ற ஆக்கபூர்வ நடவடிக்கை ஏதும் இல்லை

## ஆளும்தரப்பு மீது மாற்றுக்கொள்கைக்கான அமைப்பு குற்றச்சாட்டு

பொறுப்பக்கூறல், நல்லிணக்கம், ஆட்சியியல் நிர்வாகம் மற்றும் மனித உரிமைகள் ஆகிய 4 பிரதான கூறுகள் சார்ந்து தேர்தலுக்கு முன்னர் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பால் இன்னமும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவில்லை எனச் சுட்டிக்காட்டியுள்ளமாற்றுக்கொள்கைகளுக்கானநிலையம், இந்நிலை தொடரும் பட்சத்தில் ஆளும்தரப்பின் மீது பொதுமக்கள் கொண்டிருக்கும் நம்பிக்கை படிப்படியாக வீழ்ச்சியடையும் எனத் தெரிவித்துள்ளது.

தேசிய மக்கள் சக்தி ஆட்சிபீடமேறி மே 15 வரையான காலப்பகுதியில், அவர்களால் அளிக்கப்பட்ட தேர்தல் வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டுள்ளனவா என்பது குறித்து மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையத்தினால் ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. அந்த ஆய்வின் முடிவுகளை உள்ளடக்கி வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு:

தேசிய மக்கள் சக்தி ஆட்சியியல் நிர்வாகம் தொடர்பான தமது இலக்குகளை உள்ளடக்கிய தேர்தல் விஞ்ஞாபனத்தை கடந்த ஆண்டு நவம்பர் மாதம் வெளியிட்டது. ☞ 2

## 6000 ஏக்கர் காணியை அரசுடமையாக்கும்

# வர்த்தமானியை திரும்பப்பெற உறுதியாக வலியுறுத்துவோம்

## பிரதமருடனான சந்திப்பு குறித்து கஜேந்திரகுமார் கருத்து

பிரதமருக்கும், வட-கிழக்கு மாகாணங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் எதிர்க்கட்சிப்நாடாளுமன்றஉறுப்பினர்களுக்கும் இடையில் நாளைய நடைபெறவுள்ள சந்திப்பில் கலந்துகொண்டு, வடக்கிலுள்ள காணிகள் தொடர்பில் வெளியிட்ட வர்த்தமானி அறிவித்தலை வாபஸ் பெறுமாறு உறுதியாக வலியுறுத்தவிருப்பதாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தினால் காணி நிர்ணயக் கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் 28.03.2025 திகதியிடப்பட்டு, 2430 இலக்கமிடப்பட்டு பிரசுரிக்கப்பட்டிருக்கும் வர்த்தமானி அறிவித்தலில் வடக்கு மாகாணத்தில் மொத்தமாக 5,940 ஏக்கர் காணிகளை 3 மாதகாலத்துக்குள் ☞ 8

## மின்சாரசபை சீரமைப்புக்கான சட்டமூல வர்த்தமானி வெளியீடு

இலங்கை மின்சாரசபையின் மறுசீரமைப்பில் முன்னேற்றத்தைக் குறிக்கும்வகையில், முன்மொழியப்பட்ட மின்சார திருத்த சட்டமூலம் உத்தியோகப்பூர்வமாக வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

புதிய சட்டமூலத்துக்கமைய முன்னர் இருந்த, இலங்கை மின்சார சபையை 12 தனித்தனி நிறுவனங்களாகப் பிரிப்பதை நோக்கமாகக் கொண்ட விதிகள் நீக்கப்பட்டுள்ளன.

அதற்கு பதிலாக, திருத்தப்பட்ட ☞ 2

## காணி உரித்தை நிலைநிறுத்த தமிழ் அரசு இலவச சட்ட உதவி

வடக்கிலுள்ள காணிகள் தொடர்பில் ஆளும்தரப்பால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை அடுத்து, வெளிநாடுகளில் அல்லது தூர பிரதேசங்களில் வசிக்கும் காணி உரிமையாளர்களின் உரித்தை நிரூபிப்பதற்கான ஆவணத் தயாரிப்புக்களை மேற்கொள்ள இருக்கிறார் என்று அறிவித்துள்ள இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பதில் பொதுச்செயலாளர் சிரேஷ்ட ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், இதுகுறித்த இலவச சட்ட ஆலோசனையைப் பெற்றுக்கொள்வதற்கு நிரப்பவேண்டிய விவரங்களின் இணைப்பையும் வெளியிட்டுள்ளார்.

ஆளும்தரப்பால் காணி நிர்ணயக் கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் 28.03.2025 திகதியிடப்பட்டு, 2430 இலக்கமிடப்பட்டு பிரசுரிக்கப்பட்டிருக்கும் வர்த்தமானி அறிவித்தலில் வடக்கு மாகாணத்தில் மொத்தமாக 5,940 ஏக்கர் காணிகளை 3 மாதகாலத்துக்குள் எவரும் உரிமைகோராதுவிடின், அவை அரச காணிகளாகப் பிரகடனப்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இவ்வர்த்தமானி அறிவித்தல் தொடர்பில் கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ள தமிழ் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், அதனை உடனடியாக திரும்பப் பெறுமாறும் ஆளும்தரப்பிடம் ☞ 8

## புத்தளம் உப்பு கூட்டுத்தாபனம் பதுக்கியதாலேயே தட்டுப்பாடு

### முஜிபுர் ரஹ்மான் எம்.பி. குற்றச்சாட்டு

நாட்டில்உப்புத்தட்டுப்பாடுஏற்படுவதற்குபுத்தளம் உப்புகூட்டுத்தாபனத்தில்தனியார்வியாபாரத்திற்காக உப்பு பதுக்கி வைக்கப்பட்டுள்ளமையே காரணமாகும். அதனால் நுகர்வோர் அதிகார சபை புறக்கோட்டையில்உள்ளபெட்டிக்கடைகளில் சோதனை நடத்தாமல் அம்பாந்தோட்டை ☞ 2

## ஹெகலியவின் மகனுக்கு ஜூன் 3 வரை மறியல்

இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட முன்னாள் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவின் மகன் ரமித் ரம்புக்வெல்லவை ஜூன் 3ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதான நீதிவான் தனுஜா லக்மாலி உத்தரவிட்டார்.

இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு சந்தேகநபரிடம் ☞ 2

## பிரம்டன் நகர நினைவுத் தூபி காலப் பெறுமதி மிக்க செயல்

### கனடாவைப் பாராட்டி தமிழ் அரசு கடிதம்

கனடாவின் பிரம்டன் நகரில் இனப்படுகொலை நினைவுத்தூபி அமைக்கப்பட்டமை காலப்பெறுமதி மிக்க செயல் என்றும், அதற்கு ஈழத்தமிழர்கள் சார்பில் கனேடிய அரசுக்கு நன்றி கூறுவதாகவும் கனேடிய உயர்ஸ்தானிகர் எரிக் வோல்ஷிடம் தெரித்துள்ள ☞ 8

## பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி லஞ்ச ஆணைக்குழுவால் கைது

வவுனியா பூவரசங்குளம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி லஞ்ச ஊழல் ஆணைக் குழுவால் நேற்று மாலை கைது செய்யப்பட்டார். ஐந்து லட்சம் ரூபா லஞ்சம் பெறமுற்பட்டபோது அவர் கைது செய்யப்பட்டார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியா, பூவரசங்குளம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி லஞ்சம்கோருகிறார்என்றுலஞ்சஊழல்ஆணைக்குழுவிற்கு ☞ 2

## தொழிற்சாலை மூடப்பட்டதனால் 2000 பேர் நடு வீதியில் நிர்க்கதி

### எதிர்க் கட்சித் தலைவர் சபையில் குற்றச்சாட்டு

ஐக்கிய இராச்சிய முதலீட்டாளரின் முதலீட்டில் ஆரம்பிக்கப்பட்ட தொழிற்சாலையொன்று இன்று முற்றிலுமாக மூடப்பட்டு 2000 பேர் வீதிக்கு வந்துள்ளனர். 2028 முதல் கடனை அடைக்க தற்போது 5 வீத பொருளாதார வளர்ச்சி விகிதம் எமக்கு தேவை . தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக்கும் போது இந்த பொருளாதார வளர்ச்சி விகிதத்தை அடைவதுசாத்தியமில்லை. இத்தகைய சூழ்நிலையில், நாம் 5 வீத பொருளாதார வளர்ச்சி விகிதத்தை கொண்டு வர வேண்டும். அவ்வாறு இல்லையெனில், 2028 முதல் நமது கடன்களை மீளச் செலுத்த முடியாமல் மீண்டும் வங்குரோத்து நிலையை அடைவோம். இதுநடந்தால், நாடுபொருளாதார ☞ 2

## மருத்துவப் பணியாளர்களின் புலம்பெயர்வால் கடும் பாதிப்பு

### சுகாதார அமைச்சர் சுட்டிக்காட்டு

மருத்துவ சுகாதார பணியாளர்கள் வெளிநாடுகளிற்கு புலம்பெயர்வது குறித்து ஜெனீவாவில் இடம்பெற்ற உலக சுகாதார மாநாட்டில் சுட்டிக்காட்டியுள்ள சுகாதார அமைச்சர் நளிந்த ஜெயதிஸ்ஸ இதன் காரணமாக இலங்கையின் சுகாதார துறைக்கும் பொருளாதாரத்திற்கும் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

2022 முதல் 2025 முதல் ஆயிரக்கணக்கான சுகாதார பணியாளர்கள் நாட்டிலிருந்து வெளியேறியுள்ளனர் என அவர் தெரிவித்துள்ளார்.

726 மருத்துவர்கள், 116 மருத்துவ அதிகாரிகள், 2800 மருத்துவதாதிகள் நாட்டிலிருந்து வெளியேறியுள்ளனர் ☞ 8

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

ஆட்சியமைக்கப் போகும் தரப்புக்கள் நிரூபித்தாகவேண்டியகட்டாயம்ஏற்பட்டுள்ளது. இதில் ஆளும்தரப்புக்குத்தான் சோதனைகள் அதிகம்.

கொழும்பு மாநகர சபையில் தங்கள் ஆட்சியே அமையும் என்று ஆளும்தரப்பு என்னதான் கூளுரைத்தாலும் அந்த முயற்சிகள் அதற்குப் பெரும் சிக்கலாகத்தான் தொடர்ந்தும்நகர்கின்றன. அங்குசுயேச்சைகள் சிறுகட்சிகளுடன் பேச்சு நடத்தி மேலும் 9 பேரின் ஆதரவைப் பெற்றபோதும் ஆட்சியமைப்பதற்குப்போதியபெரும்பான்மை ஆளும்தரப்புக்குக் கிடைக்கவில்லை.

இது தொடர்பில் ஜனாதிபதி அனுர குமார திசநாயக்க தலைமையில் நேற்று பெலவத்தையில் உள்ள என்பிபி தலைமையகத்தில் உயர்மட்டக் கூட்டம் நடைபெற்றது.

ஜனநாயக தேசிய கூட்டணி (DNA), ஐக்கிய அமைதிக் கட்சி (UPP) மற்றும் மூன்று சுயேச்சைக் குழுக்களின் பிரதிநிதிகளும் கூட்டத்தில் கலந்து கொண்டனர். இவைதான் கொழும்பு மாநகர சபையில் ஆளும்தரப்பை ஆதரிக்க இணங்கியுள்ள தரப்புக்கள்.

கலந்துரையாடல்களின் போது, இந்தக் கட்சிகளும்சுயாதீனஉறுப்பினர்களும்தேசிய மக்கள் படையுடன் இணைய விருப்பம் தெரிவித்தனர்.

2025உள்ளாட்சித்தேர்தல்முடிவுகளின்படி கொழும்பு மாநகர சபையில் டிஎன்ஏ ஒரு இடத்தையும், யுபிபி இரு இடங்களையும், சுயேச்சைக் குழு 2 ஒரு இடத்தையும், சுயேச்சைக் குழு 3 மூன்று இடங்களையும், சுயேச்சைக் குழு 4 இரு இடங்களையும் கொண்டுள்ளன. -

கொழும்பு மாநகர சபையில் என்பிபிக்கு ஏற்கனவே 48 இடங்கள் உள்ளன. மேலும் 9 ஆசனங்களின் ஆதரவுடன் இப்போது 57 இடங்கள் உள்ளன. இருப்பினும், எதிர் அணி இன்னும் 60 இடங்களைத் தக்க வைத்துக் கொண்டு குறுகிய பெரும்பான்மையைப் பேணுகிறது.

இந்த நிலையில் தற்போது என்பிபிக்கு ஆதரவளிப்பதாகக் கூறியுள்ள 9 பேரில்கூட கடைசி நேரத்தில் யார் யார் எல்லாம் அணி மாறுவார்களோ என்பது உறுதியாகக் கூறமுடியாததாக உள்ளது. ஏனெனில் நேற்றையசந்திப்புமுடிந்துவெளியேறும்போது டிஎன்ஏ தேசிய அமைப்பாளர் நிலுக்ச குமார தமது கட்சியின் இறுதி நிலைப்பாடு குறித்த முறையான அறிவிப்பு நாளை (இன்று) வெளியிடப்படும் என்று நேற்று அறிவித்தார்.

இதனால், கொழும்பில் யார் ஆட்சியமைப்பார்கள் என்பது இன்னும் உறுதியாகத்தெரியவில்லை. எதிர்க்கட்சிகளோ எப்படியாவது கொழும்பில் என்பிபியை வீழ்த்தி, அநுரவின் வீழ்ச்சிக்கானபிள்ளையார் சுழியைப் போட்டுவிடுவது என்பதில் கங்கணங் கட்டிக்கொண்டுள்ளன. எனக்கு மூக்குப் போனாலும்கூப் பரவாயில்லை, எதிரிக்குச் சகுணம் பிழைத்தால் போதும் என்ற கணக்கில் எல்லா வேறுபாடுகளையும் முரண்பாடுகளையும் ஒருபுறம் ஒதுக்கி வைத்துவிட்டு கொழும்பு மாநகர சபையின் ஆட்சியைப் பிடிப்பதில் அவை மும்முரமாக நிற்கின்றன.

ஆளும்தரப்புக்கும் கொழும்பை இழப்பது கௌரவக் குறைச்ச மட்டுமன்றி, தனது தோல்வியின், அரசியல் எழுச்சியில் ஏற்பட்ட பின்னடைவின் அறிகுறி ஒன்று தலைநகரிலேயே எழுந்து நின்று பேயாட்டம் போடுவதை ஏற்கமுடியாது திண்டாடுகின்றது. அதனால்தான் எதிர்க்கட்சிகளை மிரட்டியாவது பணிய வைக்கலாமா என்று பார்க்கின்றன. எதுவும் சரிவருவதாக இல்லை.

யாழ்ப்பாணம் உட்பட வடக்கிலும் பிரதேச சபைகளில் ஆட்சியமைப்பதில் என்பிபிக்குப் பலத்த பின்னடைவுதான். தமிழ்க் கட்சிகளிடம் நேரடியாகச் சென்று ஆதரவளிக்கும்படி கேட்டால், தங்கள் அரசியல் அம்பலப்பட்டுப் போகும் என்பதால் பின்வழியால் தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளைத் தங்கள் பக்கம் இழுப்பதற்கு தலைகீழாக முயன்று பார்த்தார்கள். ஆனால் முடியவில்லை. எவரையும் இடம்பெயர்க்க முடியவில்லை. தேசியம் தேசியம் என்று கத்தி மக்களிடம் வாக்குகள் பெற்றுவிட்டு, சலுகைகளுக்காக என்பிபி பக்கம் போனால் மக்கள் தம்மை அரசியலிருந்து அடித்து விரட்டிவிடுவார்கள் என்ற அச்சம் காரணமாக எந்தவொரு உறுப்பினரும்என்பிபிபக்கம்செல்லத்தயாராக இல்லை. இதனால்இந்தப்பழம்புளிக்கும்என்ற கணக்கில், தமிழ் அரசுக் கட்சி ஆட்சியமைக்க உரிமை கோரும் இடங்களில் அந்தக் கட்சிக்கு ஒருபோதும் ஆதரவளிப்பதில்லை என்றொரு முடிவை எடுத்துவிட்டு இப்போது அமைதியாகிவிட்டார்கள்..

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## தேர்தல்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதுவே செப்டெம்பர் மாதம் நடைபெற்ற ஜனாதிபதித்தேர்தலில்அநுரகுமாரதிஸாநாயக்க வெற்றிபெறுவதற்குஅடிப்படையாகஅமைந்தது. அந்த ஆணை நவம்பர் மாதம் நடைபெற்ற நாடாளுமன்றத்தேர்தலில் தேசிய மக்கள் சக்தி 70 சதவீத ஆசனங்களை வென்றெடுத்ததன் ஊடாக மீளுறுதிசெய்யப்பட்டது. இருப்பினும் அண்மையில் நடைபெற்றுமுடிந்த உள்ளூராட்சிமன்றத்தேர்தல் முடிவுகள், பொதுமக்கள் மத்தியில் அதிகரித்துவரும் நம்பிக்கையீனத்தைக்காண்பிக்கும்வகையில் அமைந்துள்ளன.

இந்நிலையில் பொறுப்புக்கூறல், நல்லிணக்கம், ஆட்சியியல் நிர்வாகம் மற்றும் மனித உரிமைகள் ஆகிய 4 பிரதான கூறுகள் சார்ந்து தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பால் அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டுள்ளனவா என ஆராயப்பட்டுள்ளது. போர் முடிவுக்குக்கொண்டுவரப்பட்டு கடந்த 16 வருடங்களில் முன்னைய அரசாங்கங்கள் உரியவாறு நடைமுறைப்படுத்துவதில் தோல்வி கண்ட செயன்முறைகளில் இந்நான்குகூறுகளும்பிரதானமானவையாகக் காணப்படுகின்றன. இலங்கையில் அர்த்தமுள்ள நிலைமாறுகால நீதி செயன்முறையை உறுதிப்படுத்துவதற்கு முன்னெடுக்கப்படவேண்டியநடவடிக்கைகள் தொடர்பில் நாம் ஏற்கனவே பலமுறை சுட்டிக்காட்டியிருக்கிறோம். இவ்வாறானதொரு பின்னணியில் தாம் அளித்த வாக்குறுதிகளை உரிய காலப்பகுதியில் நிறைவேற்றுவதற்கு தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பு தவறும் பட்சத்தில், இவ்விடயத்தில் அரசாங்கத்தின்மீது மக்கள்கொண்டிருக்கும்நம்பிக்கைபடிப்படியாக வீழ்ச்சியடையும்.

அதன்படி முதலாவதாகப் பொறுப்புக்கூறல் விடயத்தில் உயிர்த்த ஞாயிறுதினப் பயங்கரவாதத்தாக்குதல்கள் தொடர்பில் உயர்நீதிமன்றத்தினால் குற்றவாளிகளாக அடையாளங்காணப்பட்ட அரசியல்வாதிகள் மற்றும் அரச அதிகாரிகளுக்கு எதிராக முறையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என 2023 ஆம் ஆண்டு ஏப்ரல் 17 தேசிய மக்கள் சக்தி அறிவித்தது. இருப்பினும் கடந்த ஏப்ரல் 20 ஆம் திகதி ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் அறிவுறுத்தலுக்கு அமைவாக உயிர்த்த ஞாயிறுதினத் தாக்குதல்கள் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை குற்றவிசாரணைப்பிரிவிடம்கையளிக்கப்பட்டது. ஆனால் முன்னைய ஆளும்தரப்பால் முன்னெடுக்கப்பட்ட இந்நடவடிக்கையை மீண்டும் மேற்கொள்ளவேண்டிய அவசியம் என்ன எனும் கேள்வி எழுகிறது. கடந்த ஆளும்தரப்புக்களினால் முன்னெடுக்கப்பட்ட பலதரப்பட்ட விசாரணைகளின் ஊடாக ஆக்கபூர்வமானதீர்வுகள்எவையும்எட்டப்படாத நிலையில், தற்போதைய விசாரணைகள் மூலம் குறிப்பிடத்தக்களவு முன்னேற்றம் எட்டப்படுமா எனும் சந்தேகம் நிலவுகிறது.

அடுத்ததாக பயங்கரவாதத்தடைச்சட்டம் உள்ளிட்ட ஒடுக்குமுறைச்சட்டங்கள் முற்றாக நீக்கப்படும் என தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் உத்தரவாதம் அளிக்கப்பட்டிருந்தது. இருப்பினும் தேசிய மக்கள் சக்தி ஆட்சிபீடமேறியதன் பின்னரும் பலமுறை அச்சட்டம் பிரயோகிக்கப்பட்டுவருகிறது. அச்சட்டம் குறித்து ஆராய்வதற்காக ஜனாதிபதி சட்டத்தரணி ரின்ஸி அர்ஸகுலரத்ன தலைமையில்ஆளும்தரப்பால்நியமிக்கப்பட்ட ஆணைக்குழு தொடர்பான விபரங்கள் பகிரங்கப்படுத்தப்படவில்லை.

கடந்த காலங்களில் இடம்பெற்ற அரசியல் படுகொலைகள், ஊடகவியலாளர்களின் வலிந்து காணாமலாக்கப்படல்கள் என்பன உள்ளடங்கலாக தீர்க்கப்படாமல் இருக்கும் முக்கிய வழக்குகள் தொடர்பில் முறையான விசாரணைகள் இடம்பெறும் எனவும், குற்றவாளிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தேசிய மக்கள் சக்தி வாக்குறுதியளித்தது. ஆனால் பல முக்கிய வழக்குகள் இன்னமும் தீர்க்கப்படாமல் இருப்பதுடன், இது தொடரும் தண்டனைகளிலிருந்து விடுபடும்போக்கு குறித்த கரிசனைகளை மேலும் தீவிரப்படுத்தியுள்ளது. ஊடகவியலாளர்கள் மற்றும்செயற்பாட்டாளர்களின்படுகொலைகள் தொடர்பில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எவையும் முன்னெடுக்கப்படவில்லை. கடந்த ஆண்டு டிசம்பர் 26 ஆம் திகதி கிளிநொச்சியில் ஊடகவியலாளர் முருகையா தமிழ்செல்வன்மீதுதாக்குதல்நடத்தப்பட்டமை, ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு தொடர்பில் கேள்விகளைத் தோற்றுவித்துள்ளது.

அதேபோன்று நல்லிணக்கத்தைப் பொறுத்தமட்டில் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பணிகளை மேலும் விரிவுபடுத்துவதாக ஆளும்தரப்பு வாக்குறுதி அளித்திருந்த போதிலும், அதனை நடைமுறைப்படுத்துவதற்கு முன்னெடுக்கப்பட்டிருக்கும் நடவடிக்கைகள் குறித்த விபரங்கள் இன்னமும் வெளியிடப்படவில்லை. போர்க்குற்றங்களில் ஈடுபட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருப்பவர்களுக்கு எதிராக வழக்குத் தொடர்வதற்கான திட்டங்கள் எவையும் இல்லை.

காணிகள் தொடர்பில் நிலவும் பிரச்சினைகளுக்கு காணிகள் தொடர்பான ஆணைக்குழுவின் ஊடாகத் தீர்வு வழங்கப்படும் என்று உத்தரவாதம் அளிக்கப்பட்டிருந்தது. இருப்பினும் அதற்குரிய நடவடிக்கைகள் எவையும் முன்னெடுக்கப்படவில்லை என்பதுடன், வடக்கிலுள்ள சுமார் 6000 ஏக்கர் காணிகள் தொடர்பில் ஆளும்தரப்பால் வர்த்தமானி அறிவித்தல் ஒன்றும் வெளியிடப்பட்டுள்ளது.

தேர்தலுக்கு முன்னர் வாக்குறுதி அளிக்கப்பட்டதுபோல் மதங்களுக்கு இடையிலானபேரவைஸ்தாபிக்கப்படவில்லை. அரசியல் கைதிகள் விடுவிக்கப்படவில்லை. போர் இடம்பெற்ற காலப்பகுதியில் இடம்பெயர்ந்த, அங்கவீனமடைந்த நபர்களுக்கும், போர் விதவைகளுக்கும் நிவாரணங்கள் வழங்கப்படவில்லை.

அதேவேளை ஆட்சியியல் நிர்வாகத்தைப் பொறுத்தமட்டில் தேர்தலுக்கு முன்னர் தேசிய மக்கள் சக்தியினால் அளிக்கப்பட்ட உத்தரவாதத்துக்கு அமைவாக நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிப்பதற்குரிய நடவடிக்கைகள் இன்னமும் முன்னெடுக்கப்படவில்லை. புதிய அரசியலமைப்பு உருவாக்க செயன்முறை ஆரம்பிக்கப்படவில்லை.

மனித உரிமைகள் விடயத்தில் சிறுவர்கள், பெண்கள் மற்றும் அங்கவீனமுற்றோரின் உரிமைகளை அரசியலமைப்பின் ஊடாக உறுதிப்படுத்துதல், சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச சமவாயச்சட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ள உரிமைகளை அங்கீகரித்தல், புதிய நாடாளுமன்றத்தேர்தல் முறைமையை அறிமுகப்படுத்துதல், புலம்பெயர்ந்தோர் வாக்களிப்பதற்கான உரிமையை உறுதிப்படுத்துதல், சிறைக்கைதிகளின் நலன்களை உறுதிப்படுத்துதல், ஒடுக்குமுறைகளுக்கு எதிரான ஆணைக்குழுவை ஸ்தாபித்தல், பின்தங்கிய மற்றும் நலிவுற்ற சமூகப்பிரிவினரின் உரிமைகளை உறுதிப்படுத்துதல் என்பவற்றுக்கான நடவடிக்கைகள் இன்னமும் முன்னெடுக்கப்படவில்லை என அவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## பொலிஸ் ...

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முறைப்பாடு வழங்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து நேற்றைய தினம் பூவரசங்குளம் பொலிஸ் நிலையத்திற்கு வருகைதந்தலஞ்சஊழல்ஆணைக்குழுவின் அதிகாரிகள் பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரியை ஐந்து லட்சம் ரூபா லஞ்சம் பெற முற்பட்டபோது கைது செய்துள்ளனர். காணி விடயம் ஒன்று தொடர்பாக இந்த லஞ்சம்பெறப்பட்டதாகதெரிவிக்கப்படுகின்றது.

கைது செய்யப்பட்ட பொறுப்பதிகாரி மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக வவுனியா தலைமை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். அவர்இன்றுவவுனியா நீதிமன்றில் முற்றப்படுத்தப்படவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## ஹெகலியவின் ...

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று வாக்குமூலங்களைப்பதிவுசெய்திருந்த நிலையில், பின்னர்கைதுசெய்துநீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியது.

சந்தேகநபர் முன்னாள் அமைச்சர் கெஹெலியரம்புக்வெல்லவின்மகன்என்றும், அவர் முன்னாள் அமைச்சரின் தனிப்பட்ட செயலாளராக பணியாற்றியவர் என்றும் இலஞ்சஊழல்விசாரணைஆணைக்குழுவின் அதிகாரிகள் நீதிமன்றத்தில் சாட்சியங்களை முன்வைத்தனர்.

சந்தேகநபர் தனது கையொப்பத்துடன் கூடிய பட்டியலை அமைச்சக செயலாளரிடம் சமர்ப்பித்து, அமைச்சரின் பிரத்தியேக பணியாளர்களாக 15 நபர்களை பரிந்துரைத்து அவர்களை நியமிக்க கோரியதாக அதிகாரிகள் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

குறித்த 15 பேரும் அமைச்சில் ஒருபோதும் பணியாற்றவில்லை என்றும், அவர்கள் அந்தப் பதவிகளுக்கு பெயரளவில் நியமிக்கப்பட்டுள்ளனர் என்றும், அவர்களின் சம்பளம் மற்றும் மேலதிக நேரக் கொடுப்பனவுகள் அனைத்தும் பிலிமதலாவ பகுதியில் அமைந்துள்ள ஒரு தனியார் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

விசாரணைகளின் போது இந்தப் பணம் பின்னர் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவின் அரசியல் ஆதரவாளர்கள் மற்றும்நண்பர்களுக்குவழங்கப்பட்டதாகவும், அமைச்சரின் தனிப்பட்ட பயன்பாட்டிற்கும் பயன்படுத்தப்பட்டதாகவும்தெரியவந்துள்ளது.

பெயரளவில் நியமிக்கப்பட்ட நபர்களின் அனைத்து கொடுப்பனவுகளும் இந்த சந்தேக நபரால் அங்கீகரிக்கப்பட்டதாகவும், இதன் மூலம் அரசாங்கத்திற்கு ஏற்பட்ட இழப்பு 8 மில்லியன் ரூபாவுக்கும் அதிகம் என்றும் விசாரணைகளில் தெரியவந்துள்ளன.

சந்தேக நபரும் ஏனைய குழுவும் இணைந்து இந்த சட்டவிரோத செயலைச் செய்ததாக விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகள் நீதிமன்றத்திற்குத் தெரிவித்தனர்.

இந்தசம்பவம்தொடர்பானவிசாரணைகள் தொடர்ந்து நடைபெற்று வருவதால், சந்தேக நபரை எதிர்வரும் 3 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடுமாறு இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகள் நீதவானிடம் கோரிக்கை முன்வைத்தனர்.

இருப்பினும், சந்தேக நபரின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி காஞ்சன ரத்வத்தே, இலஞ்சஊழல்விசாரணைஆணைக்குழுவின் அனைத்து குற்றச்சாட்டுகளையும் மறுப்பதாகக் கூறினார்.

இலஞ்சஊழல்விசாரணைஆணைக்குழு தெரிவிப்பது போன்று, இந்த சம்பவத்தின் மூலம்தனதுநன்கொடையாளரின்கணக்கிற்கு எந்தப் பணமும் மாற்றப்படவில்லை என்றும், தற்போதுள்ள சட்ட நிபந்தனைகளுக்கு இணங்கவே செயல்பட்டதாகவும் சட்டத்தரணி தெரிவித்தார்.

அதன்படி, சந்தேக நபரை பிணையில் விடுவிக்குமாறுஅவர்நீதிமன்றத்தைகோரினார். முன்வைக்கப்பட்ட சமர்ப்பணங்களை பரிசீலித்த நீதவான், சந்தேக நபரை எதிர்வரும் 3 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

## புத்தளம் ...

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் புத்தளத்திற்கு சென்று முடிந்தால் உப்பு எங்கே உள்ளது என்று பரிசோதனை செய்யட்டும் என ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற நிதிச் சட்டத்தின் கீழான கட்டளைகள் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேசிய மக்கள் சக்தி ஆட்சியேற்று 7 மாதங்கள் கடந்துள்ளன. ஆனால் இன்னும் நாட்டில் சில உணவுப் பொருட்களுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது. இதற்கு துரித தீர்வுகளை அரசாங்கத்தால் செய்ய முடியவில்லை. அண்மையில் அரிசி தொடர்பான பிரச்சினை வந்தபோது, வரிகளை அறவிட்டு வெளிநாட்டில் இருந்து அரிசியை இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது. இந்நிலையில் உப்புபிரச்சினையும்ஏற்பட்டுள்ளது. இதுகடந்த 6 மாதங்களாக நிலவுகிறது. இவ்வாறான தட்டுப்பாடு ஏற்படும் என்று தெரியும். அது தொடர்பான தீர்மானங்கள் என்ன, ஏன் தட்டுப்பாட்டை தடுக்க முடியவில்லை என்பதனை கூற வேண்டும். அதனை விடுத்து மழை பெய்வதாலோ, முன்னாள் ஆளும்தரப்பினாலோ இது ஏற்பட்டது என்று கூறுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

எவ்வாறாயினும் கடந்த 6 மாதங்களாக

தொடர்ச்சி 8ம் பக்கம்....

காலைக்கதிர் Kalaikkathir

# 310 படகுகளுக்கான அனுமதியில் 600 படகுகள் கடலட்டை பிடிப்பில்

## ஊழலற்ற ஆட்சியில் எப்படிச் சாத்தியம் என மீனவர் சங்கப் பிரதிநிதி கேள்வி

யாழ். மாவட்டத்தில், வடமராட்சி பகுதிகளில் கடலட்டை பிடிக்கனுமதி வழங்கக்கூடாது என நாம் குரல் குடுத்து வரும் நிலையிலும் என்பிபி ஆளும்தரப்பு 310 படகுகளுக்கு அனுமதி வழங்கியுள்ளது. ஆனால் 600 படகுகள் கடலட்டை பிடிப்பதில் ஈடுபட்டுள்ளன. ஊழலற்ற ஆட்சியில் இது எப்படிச் சாத்தியமானது? என்று வடமாகாண கடற்றொழில் இணையத்தின் பிரதிநிதி நாகராசா தெரிவித்தார்.

நேற்று செய்தியாளர்களிடம் பேசும்போது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ். மாவட்டத்தில் குறிப்பாக வடமராட்சி பகுதிகளில் கடலட்டை பிடிக்க அனுமதி வழங்கக் கூடாது என நாம் குரல் குடுத்து வரும் நிலையில், 310 படகுகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கடலட்டை பிடிப்பதற்காக 310 படகுகளுக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ள நிலையில், 600 வரையான படகுகள் கடலட்டை பிடியில் ஈடுபட்டுள்ளன. ஊழலற்ற கட்சி, அரசு என கூறிக்கொண்டு வந்த என்.பி.பி. 310 படகுக்கு அனுமதி வழங்கியுள்ள நிலையில், எப்படி 600 வரையான படகுகள் கடலட்டை பிடியில் ஈடுபட்டுள்ளன.

அனுமதிக்கு மேலான 300 படகுகளுக்கும் லஞ்சம் வாங்கியே வடமராட்சி கிழக்கு கடலில் கடலட்டை பிடிக்கான படகுகள் தரித்து விடப்பட்டுள்ளன.

தடை செய்யப்பட்டுள்ள தொழில்களுக்கு லஞ்சம் வாங்கிக் கொண்டு அனுமதியளிக்கும் அமைச்சு. கடல், மீன்பிடி பற்றி தெரியாத ஒருவர் அமைச்சராக இருந்து கொண்டு கடற்றொழில் பற்றிப் பேசுவது கிடையாது. நாடாளுமன்றில் நேற்று விவசாயம், குளங்கள், வீதிகள் பற்றி பேசும் அமைச்சர் கடற்றொழில் பற்றி பேசவே இல்லை.

உள்ளூராட்சிசபைகளை ஆட்சி செய்வதில் தமிழ்க் கட்சிகள் ஒன்று சேர வேண்டும், ஒன்று சேர்ந்து ஆட்சியமைக்க முன்வர வேண்டும். இனி மேலும் ஒன்று சேராமல் தமிழ் மக்களின் பிரசினைகளை கையாள முடியாது.

இதனை தமிழ்க் கட்சிகள் உணர்ந்து மக்களின் ஆணைக்கு மதிப்பளிக்கவேண்டும். அவ்வாறு இல்லாதுவிடின் எதிர் காலத்தில் மக்கள் இவ்வாறான கட்சிகளை நிராகரிக்க வேண்டும்.

தனித்து நிற்கும் கட்சிகளுக்கோ அல்லது அரசியல் வாதிகளுக்கோ வெளிநாட்டில் இருந்து எமது உறவுகள் பணம் அனுப்புவதை உடனடியாக நிறுத்தவேண்டும். அவ்வாறு பணம் அனுப்புவதை நிறுத்தினாலே இங்குள்ளவர்களை வழிக்கு பொண்டுவர முடியும்.

அரசு காணி சவீகரிப்பு தொடரபில் வர்தமானி ஒன்றை வெளியிட்டுள்ளது. 5,985 ஏக்கர் காணிகளில் 3500 ஏக்கர் வரையான காணி வடமராட்சி கிழக்கில் காணப்படுகிறது. இக் காணிகளில் மக்கள் பரம்பரை பரம்பரையா வாழ்ந்து, கடற்றொழில் மற்றும் விவசாய நடவடிக்கையில் ஈடுபட்டு வந்த பூர்வீக்க் காணிகள் இவை.

யுத்தம் காரணமாக வேறு காரணங்களால் மக்கள் குறத்த பகுதகளை விட்டு வெளியேறியுள்ளனர். இதில் பலர் வெளி நாடுகளில் வசித்து வருகின்றனர், பலர் வேறு பகுதகளில் வசித்து வரும் நிலையில் இக் காணிகளை அரசுடமையாக்க அரசு முனைவதை நாம் எதிர்க்கறோம் - என்றார்.

# ஏ.எல். பெறுபேறு நிறுத்தப்பட்ட மாணவருக்கு அநீதி ஏற்படாது

## பிரதமர் ஹரிணி உறுதியளிப்பு

கல்வி பொதுத் தராதர உயர்தர பரீட்சை பெறுபேறுகள் இடை நிறுத்தப்பட்டிருக்கும் மாணவர்களுக்கு அநீதி ஏற்படாமல் பார்த்துக்கொள்ள நடவடிக்கை எடுப்போம் என பிரதமரும் கல்வி அமைச்சருமான ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர் முஜிபுர் ரஹ்மானின் கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே இதனைத் தெரிவித்தார்.

“கல்வி பொதுத் தராதர உயர்தர பரீட்சை பெறுபேறுகள் கடந்த மாதம் வெளியிடப்பட்டிருந்தது. இதன்போது சுமார் 456 மாணவர்களின் பெறுபேறுகளில் ஒரு சில பாடங்களுக்கான பெறுபேறு இடை நிறுத்தப்பட்டுள்ளன. ஏதாவது ஒரு காரணத்துக்காக அவ்வாறு செய்திருக்கலாம். என்றாலும் இந்த மாதம் 29ஆம் திகதிக்கு முன்னர் பல்கலைக்கழகங்களுக்கு விண்ணப்பிக்குமாறு உயர்கல்வி அமைச்சினால் அறிவிப்பு செய்யப்பட்டிருக்கிறது.

பரீட்சைஆணையாளர்நாயகத்தினால்இடைநிறுத்தப்பட்டிருக்கும் பெறுபேறுகள் தொடர்பில் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாமல் இருக்கிறது. அந்த மாணவர்களைப் பரீட்சைகள் திணைக்களத்துக்கு அழைத்து நேர்முக விசாரணை ஒன்றும் நடத்தப்பட்டிருக்கிறது. பல்கலைக்கழகத்துக்கு விண்ணப்பிப்பதற்கு இன்னும் குறுகிய காலமே இருக்கின்ற நிலையில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் இந்த இடைநிறுத்தப்பட்டிருக்கும் பெறுபேறுகள் தொடர்பில் எந்த நடவடிக்கையும் எடுக்காமல் இருப்பது முறையற்றது.

அதனால் கல்வி அமைச்சர் என்ற வகையில் பிரதமர் உடனடியாக இந்த விடயத்தில் தலையிட்டு, இந்த பெறுபேறுகளை உடனடியாக வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். அல்லது பல்கலைக்கழகத்துக்கு விண்ணப்பிப்பதற்கான காலத்தை நீடிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்“ என்று முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

இதற்குப் பதிலளித்த பிரதமர் தெரிவித்ததாவது:

கல்வி பொதுத் தராதர உயர்தர பரீட்சை பெறுபேறுகள் இடைநிறுத்தப்பட்டுள்ள மாணவர்களில், அந்த பிரச்சினையில் இருந்து விடுதலையாகும் மாணவர்களின் பெயர்களை இன்று (நேற்று) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு பரீட்சை திணைக்களம் அறிவிக்கும்.

மீள்திருத்தம் மற்றும் பல்கலைக்கழகத்திற்கு விண்ணப்பிப்பதற்கான காலத்தையும் அவர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக பரீட்சைகள் திணைக்களம் அறிவித்திருக்கிறது. அதனால் இந்த மாணவர்களுக்கு அநீதி ஏற்படாத வகையில் பார்த்துக்கொள்ள நடவடிக்கை எடுப்பேன் என்றார்.

# 40,000 ஆசிரியர்களுக்கு இலங்கையில் பற்றாக்குறை

## பிரதமர் சபையில் தெரிவிப்பு

நாடு முழுவதும் தற்போது 40,000 ஆசிரியர்கள் பற்றாக்குறை இருப்பதாகவும், இந்த ஆண்டு இறுதிக்குள் வெற்றிடங்களில் குறிப்பிட்டளவு தொகையையாவது ஆட்சேர்ப்பு செய்ய ஆளும்தரப்பு எதிர்பார்ப்பதாகவும் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் எழுப்பிய கேள்வியொன்றுக்கு பதிலளிக்கும் போதே பிரதமர் நேற்று நாடாளுமன்றத்தில் இதனைத் தெரிவித்தார்.

இதன் போது கருத்துத் தெரிவித்த பிரதமர் மேலும் கூறியதாவது,

அரச பாடசாலைகளில் ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை 4,240 சிங்கள மொழி மூல ஆசிரியர் வெற்றிடங்களும், 2,827 தமிழ் மொழி மூல ஆசிரியர் வெற்றிடங்களும் உள்ளன. ஆறு முதல் பதினொன்றாம் வகுப்பு வரை 11,274 சிங்கள மொழி மூல ஆசிரியர் வெற்றிடங்களும், 6,121 தமிழ் மொழி மூல ஆசிரியர் வெற்றிடங்களும் உள்ளன.

மேல் மாகாணத்தில் மட்டும், அரசாங்கப் பாடசாலைகளில் ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை 1310 சிங்கள மொழி மூல ஆசிரியர் வெற்றிடங்களும் 302 தமிழ் மொழி மூல ஆசிரியர் வெற்றிடங்களும் ஆறு முதல் பதினொன்றாம் வகுப்பு வரை 1325 சிங்கள மொழி மூல ஆசிரியர் வெற்றிடங்களும், 397 தமிழ் மொழி மூல ஆசிரியர் வெற்றிடங்களும் உள்ளன. மொத்தமாக, நாடு முழுவதும் 40,000 ஆசிரியர் வெற்றிடங்கள் உள்ளன.

கல்வி அமைச்சில் உள்ள வெற்றிடங்களை நிரப்பும் போது பரீட்சை முறை மூலம் நிரப்ப அரச சேவை ஆணைக்குழு பரிந்துரைகளை வழங்கியுள்ளது. பட்டதாரிகளை ஆசிரியர் பணியில் சேர்ப்பது தொடர்பாக தற்போது நீதிமன்ற வழக்கு நடவடிக்கையொன்று முன்னெடுக்கப்பட்டு வருகிறது. இவற்றையெல்லாம் கருத்திற் கொண்டு, ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்ப பட்டதாரிகளை ஆட்சேர்ப்பு செய்வதில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், இந்த ஆண்டு இறுதிக்குள் தற்போதுள்ள வெற்றிடங்களில் குறிப்பிட்டளவு தொகையையாவது நிரப்ப ஆளும்தரப்பு எதிர்பார்ப்பதாக பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

# அயலுறவு அமைச்சருடன் வத்திக்கான் தூவர் சந்திப்பு

இலங்கையின் வத்திக்கான் அப்போஸ்தலிக்க தூதுவர் பேராயர் பிரயன் உடெய்க்வே, தனது பதவிக்காலம் முடிவடைந்து புறப்படுவதற்கு முன்பு வெளிநாட்டலுவல்கள், அயலுறவுத்துறை அமைச்சர் விஜித ஹெரத்தை சந்தித்துள்ளார்.

இந்த சந்திப்பானது நேற்று அமைச்சின் அலுவலகத்தில் இடம்பெற்றது. 2020 ஆம் ஆண்டு முதல் இலங்கைக்கான வத்திக்கான் தூதுவராகப் பணியாற்றி வரும் தூதுவர் பேராயர் பிரயன் உடெய்க்வே, இலங்கையில் இருந்த காலமானது மறக்க முடியாத நிகழ்வுகளால் நிறைந்த காலம் என்றும், இலங்கை மிக அழகான நாடாக நீண்ட காலம் தனது நினைவில் இருக்கும் என்றும் அமைச்சர் விஜித ஹேரத்திடம் தெரிவித்தார்.

வத்திக்கானில் நடைபெற்ற பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸின் இறுதிச் சடங்கில் அமைச்சர் பங்கேற்றதற்காக வத்திக்கானின் சார்பாக அமைச்சர் விஜித ஹேரத்துக்கு தூதுவர் தனது நன்றியைத் தெரிவித்தார்.

இலங்கையிலிருந்து வெளியேறும் வத்திக்கான் தூதுவருக்கு நன்றி தெரிவித்த அமைச்சர், வத்திக்கான் எப்போதும் இலங்கைக்கு இணக்கமான முறையில் செயல்பட்டு வருவதாகவும், அதற்காக இலங்கை ஆளும்தரப்பு தனது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதாகவும் தெரிவித்தார்.

எத்தியோப்பியாவிற்கான வத்திக்கான் தூதுவராகஎதிர்காலத்தில்பொறுப்பேற்கவுள்ள பேராயர் பிரயன் உடெய்க்வேக்கு, அமைச்சர் தனது வாழ்த்துக்களையும் தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## வாக்குறுதிகள் வெறும் வார்த்தைகளா?

இலங்கையின் தற்போதைய ஆளும்தரப்பான தேசிய மக்கள் சக்தி (என்பிபி) ஆட்சி அதிகாரத்திற்கு வந்து ஒரு வருடத்துக்கும் மேல் ஆன நிலையில், மக்களின் எதிர்பார்ப்பு மற்றும் ஆட்சியின் பொறுப்புணர்வு குறித்துப் பல கேள்விகள் எழுந்துள்ளன. அரசமைப்பு மாற்றம், பொறுப்புக்கூறல், நல்லிணக்கம் மற்றும் மனித உரிமைகள் ஆகிய முக்கியமான கூறுகளில் வாக்குறுதிகள் வழங்கப்பட்டிருந்தாலும், அவற்றை நடைமுறைப்படுத்துவதில் ஆளும்தரப்பு காட்டும் அக்கறை மிகவும் கவலைக்கிடமானதாக உள்ளது.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் வெளியிட்ட அறிக்கையின்படி, தேர்தலுக்கு முன் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் பெரும்பாலும் நிரப்பப்படாத வாக்குறுதிகளாகவே இருந்து வருகின்றமை சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களில் குற்றவாளிகளாக அடையாளங்காணப்பட்ட அரசியல்வாதிகளுக்கு எதிரான நடவடிக்கைகள் உறுதியாக எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. ஆனால், கடந்த ஆட்சியாளர்களின் நடவடிக்கைகளை மீண்டும் மீளப்பரிசீலனை செய்வதைத் தவிர, ஆளும்தரப்பால் புதிதாக எதுவும் செய்யப்படவில்லை என்பதை மாற்றுக்கொள்கைகளுக்கான மையம் சுட்டிக்காட்டியுள்ளது. இதுவே நீதிக்காக காத்திருக்கும் மக்களின் நம்பிக்கையை உடைக்கும் தன்மையுடன் காணப்படுகிறது.

பயங்கரவாதத்தடைச்சட்டம் (PTA) உள்ளிட்ட ஒடுக்குமுறை சட்டங்களை நீக்குவதாக உறுதி அளித்திருந்த போதும், அந்த சட்டம் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இதேபோல், ஊடகவியலாளர்கள் மற்றும் செயற்பாட்டாளர்களின் பாதுகாப்பு தொடர்பான வாக்குறுதிகளும் வெறும் ஆவணங்களில் மட்டுமே உள்ளன போலத் தோன்றுகிறது. கிளிநொச்சியில் கடந்த ஆண்டு தாக்கப்பட்ட ஊடகவியலாளர் தமிழ்செல்வனின் சம்பவம், இந்த பயத்தை மீண்டும் உறுதிப்படுத்துகிறது.

நல்லிணக்க முயற்சிகள் குறித்துப் பேசப்படும் போதும், உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பணிகள் பற்றிய எந்தவொரு தகவலும் வெளிவரவில்லை. காணிகள் மீதான பிரச்சினைகள், அரசியல் கைதிகள் விடுதலை, போர் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் போன்ற முக்கிய விடயங்களில் எந்தவொரு திட்டமுமே செயல்படுத்தப்படாத நிலைமை, ஆட்சியின் சமூகப் பொறுப்பின்மையை காட்டுகின்றன. இவற்றையெல்லாம் மாற்றுக்கொள்கைகளுக்கான மையத்திற் அறிக்கை தெளிவாக எடுத்துக்காட்டுகின்றது.

மனித உரிமைகள் தொடர்பாக, பலஉரிமைகள் குறித்து உறுதிப்படுத்தப்பட்ட வாக்குறுதிகள் காத்திருக்கும் நிலையில் உள்ளன. சிறுவர்கள், பெண்கள், மாற்றுத்திறனாளிகள், சிறைக்கைதிகள், புலம்பெயர்ந்தோர் உள்ளிட்ட பலரும் இன்னும் உறுதிப்படுத்தப்பட்ட பாதுகாப்பு அல்லது உரிமைகள் ஒன்றையும் அனுபவிக்க முடியாத நிலைமையில் உள்ளனர். புதிய அரசியலமைப்பு உருவாக்கம் தொடர்பாகவும், நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறைமையை நீக்குவதற்கான எந்தவொரு முன்னேற்றமும் காணப்படவில்லை.

இந்நிலையிலே, ஆளும்தரப்பு மக்கள் முன் எடுத்துக் கொண்ட பொறுப்புக்களை முழுமையாக மீறி வருவது அப்பட்டமாகவே தெரிகிறது. இதுவரை இந்தக் குற்றச்சாட்டுக்கள் எதிர்க் கட்சிகளால் மட்டுமே கூறப்படுவதாகவும் இது அரசியல் காழ்ப்புணர்வின் காரணமாகக் கூறப்படுவதாகவுமே ஆளும்தரப்பு தெரிவித்து வந்தது. இப்போது எதிர்க் கட்சிகளைத் தாண்டி பொது அமைப்புக்களும் ஆளும்தரப்பின் பலவீனங்களைச் சுட்டிக்காட்டத் தொடங்கிவிட்டன. ஆளும்தரப்பின் செயற்பாட்டுப் போக்கு இனியும் பொறுத்துக்கொள்ளத்தக்கதல்ல என்பதே இதன் வெளிப்பாடு

தேர்தல் வெற்றிக்காக வழங்கப்படும் வாக்குறுதிகள் வெறும் அரசியல் வாக்குறுதிகளாகவே முடிவடைகின்றன எனும் மக்கள் மனப்பான்மை, தற்போதைய செயலற்ற போக்கால் மேலும் உறுதிப்படுத்தப்படுகின்றது. இது தொடர்ந்தால், மக்கள் நம்பிக்கையில் ஏற்படக் கூடிய வீழ்ச்சி, ஆட்சியின் நீதித்தன்மையைக் கேள்விக்குள்ளாக்கும்.

ஆட்சி என்பது வெறும் அதிகார சக்கரத்தில் சுற்றுவது அல்ல. அது நம்பிக்கையையும் பொறுப்பையும் ஏந்தும் கடமை. அந்த கடமையை புறக்கணிக்கும் ஒவ்வொரு நாளும், மக்களின் எதிர்காலம் இருண்ட சாயலில் இழுக்கப்படுகின்றது என்பதே பொருள்.

# எதிர்க் கட்சிகள் இணைந்து ஆட்சியமைப்பதற்கு ஆதரவு

## பெரமுன கட்சி மீண்டும் அறிவிப்பு

எதிர்க்கட்சிகள் இணைந்து ஆட்சியமைப் பதற்கு பொதுஜனஐக்கிய முன்னணியாகநாம் எமது ஒத்துழைப்பினை வழங்குவோம். மக்கள் ஆணைக்கு நாம் தலை வணங்கி அவர்களின் எதிர்பார்ப்பினை நிறைவேற்றுவோம் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் லசந்த அழகியவண்ண தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தலைமையகத்தில் திங்கட்கிழமை இரவு இடம்பெற்ற விசேட சந்திப்பொன்றின் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். கட்சியின் தேசிய அமைப்பாளர் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச ஏற்கனவே இது தொடர்பில் அறிவித்திருந்த நிலையில் நேற்று லசந்த மேலும் தெரிவித்ததாவது:

ஏனைய கட்சிகளுடனான பேச்சுதற்போது வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. குறிப்பாக பொது ஜன பெரமுனவுடன் பிரத்தியேகமாக பேச்சு நடத்தப்பட்டு வருகின்றது. முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் இது குறித்த பேச்சில் கலந்து கொள்கின்றமை மகிழ்ச்சியளிக்கிறது.

எதிர்க்கட்சிகள் இணைந்து ஆட்சியமைப் பதற்கு பொதுஜனஐக்கிய முன்னணியாகநாம் எமது ஒத்துழைப்பினை வழங்குவோம். மக்கள் ஆணைக்கு நாம் தலை வணங்குகின்றோம். ஆளும்தரப்புக்கு வாக்களித்ததைப் போன்றே, எதிர்க்கட்சிகளுக்கும் மக்கள் வாக்களித்திருக்கின்றனர். எனவே மக்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு எமக்கிருக்கிறது.

மக்களின் நிலைப்பாட்டுக்கு எதிராக செயற்பட முடியாது. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சிக்கு மாத்திரம் சுமார் 1200 உறுப்பினர்கள் உள்ளனர். அதற்கமைய சுமார் 125 சபைகளில் எதிர்க்கட்சிகளால் ஆட்சியமைக்க முடியும். அன்று இந்த ஆளும்தரப்பு சுயேட்சை குழுக்களை ஏளனப்படுத்தியமையை முழு நாடும் அறியும். அதே ஆளும்தரப்பு தான் இன்று அவற்றின் கால்களில் விழுந்துள்ளன என்றார்.

# மூளை ஆரோக்கிய தினத்தை முன்னிட்டு யாழ். நகரில் நடைபவனி, மரதன் ஓட்டம்

உலக மூளை ஆரோக்கிய தினத்தை முன்னிட்டு வடக்கு மாகாணத்தில் உள்ள மக்களின் ஆரோக்கியத்தை விருத்தி செய்யும் வகையில் நடைபவனி மற்றும் மரதன் போட்டிகள் நடத்தப்படவுள்ளன என இலங்கை நரம்பியல் நிபுணர் சங்கத்தின் தலைவரும் நரம்பியல் நிபுணருமான வைத்தியர் அஜந்தா தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் செய்தியாளர்களைச் சநதித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார். இந்தச் சந்திப்பில் வடக்கு மாகாண விளையாட்டு திணைக்களப் பணிப்பாளர் முகுந்தன், யாழ்ப்பாண மாவட்ட விளையாட்டு துறை அதிகாரி விஜிதரன் ஆகியோரும் பங்கேற்றிருந்தனர். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை நரம்பியல் நிபுணர் சங்கத்தின் ஊடாகவட மாகாணமக்களுக்கு ‘மூளையின் ஆரோக்கியத்தைப் பேணுதல்‘ எனும் தொனிப் பொருளில் வயது மற்றும் பால் வேறுபாடு இல்லாமல் செயற்பாடுகளை முன்னெடுக்கவுள்ளோம்.

உலக மூளை ஆரோக்கிய தினம் என்பது ஒவ்வொரு ஆண்டும் உலக நரம்பியல் சம்மேளனத்தினுடைய ஆலோசனைக்கமைய ஒவ்வொரு நாட்டிலும் உள்ள நரம்பியல் சம்பந்தமான, மூளை சம்பந்தமான அமைப்புகள் ஒன்றிணைந்து மக்களிடையே மூளை பற்றிய கருத்துக்களை கொண்டு சேர்ப்பது மட்டுமல்லாது மூளையுடன் சம்பந்தமான நோய்கள் எவை, அவ ஏன் ஏற்படுகின்றன, அவற்றை எவ்வாறு கட்டப்படுத்தலாம் என்பன பற்றி மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த ஆரம்பிக்கப்பட்ட ஒருதினமாக முன்னெடுக்கப்படுகிறது. ஜூலை 22 நாம் அந்த தினத்தை கொண்டாடுகிறோம். அந்தத் தினத்தை முன்னிட்டு வடக்கு மாகாணத்திலே இது சம்பந்தமாக ஆரம்ப கட்ட நிகழ்வாக இரண்டு நிகழ்வுகளை மேற்கொள்ளவுள்ளோம்.

இளம் சமுதாயத்தினருக்கு உடற் பயிற்சியை ஊக்குவிக்கவும், தடகள விளையாட்டுக்களில் பங்கேற்க செய்யும் வகையிலான ஆர்வத்தை தூண்டும் வகையிலும் மரதன், தடகள விளையாட்டை மேற்கொள்ளவுள்ளோம்.

மூளையைத் தாக்குகின்ற நோய்களில் மிகக் கொடூரமானதும், அதிகமாக எமது மக்களிடையே காணப்படுவதும் பக்கவாதமாகும். பக்கவாதம் சம்பந்தமான தனிப்பட்ட விழிப்புணர்வைஏற்படுத்துவதற்கு ஒருநடைபவனியைஏற்பாடு செய்துள்ளோம். வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சும் ஒத்துழைத்துள்ளது.

எதிர்வரும் மே மாதம் 25 காலை 6 மணிக்கு யாழ்ப்பாணம் கந்தர்மடம் சந்தியிலிருந்து நடை பவனி ஆரம்பித்து துரையப்பா விளையாட்டரங்கில் முடிவடையும்.

இந்த நிகழ்விலே பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், விரிவுரையாளர்கள் ஆசிரியர்கள், அதிபர்கள் மட்டுமல்லாது இந்த நோயினால் பாதிக்கப்பட்ட நோயாளர்கள், அவருடைய குடும்பத்தினர்கள், சிறுவர்கள், வயது வந்தவர்கள், பொதுமக்கள் என அனைவரையும் பங்கேற்க அழைக்கின்றோம்.

மரதன், தடகள போட்டியில் பங்கேற்க விரும்பும் ஆர்வலர்கள் அனைவரும் எதிர்வரும் மே மாதம் 25 பண்ணை பகுதியில் 5.30 மணியளவில் ஒன்றுகூடுவதன் மூலமாக இதில் பங்கேற்கமுடியும்.

பண்ணை பகுதியில் ஆரம்பிக்கும் மரதன் ஓட்டம் கந்தர்மடத்தை அடைந்து கல்வியன்காடு, கோப்பாய் ஊடாக உரும்பிராய், மருதனார்மடம், இணுவில், கொக்குவில் ஊடாக யாழ்ப்பாணம் துரைப்பா விளையாட்டரங்கில் நிறைவடையும்.

மரதன் ஓட்டத்தை இடை நடுவில் இருந்தும் குறிப்பிட்ட தூரத்தை ஓடுவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது.

பாடசாலைகள், கல்வியியல் கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள், அரச அலு வலகங்கள் போன்றவற்றுக்கு இது சம்பந்தமான விடயங்கள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன.

இதில் அதிகளவானவர்கள் பங்குபற்றுவதன் மூலம் விளையாட்டு நிகழ்வைத் தாண்டி, உடல் ஆரோக்கியத்தையும் மூளையின் ஆரோக்கியத்தையும் கூட தொடர்ச்சியாகப் பேணமுடியும் - என்றார்.

# அபிவிருத்தித் திட்டங்களை மீள தொடங்கும்போது பன்மடங்கு அதிக தொகையைச் செலுத்த நேரிடும்

## நிதி பிரதி அமைச்சர் எச்சரிக்கை

ஜப்பான் அரசு இடைநிறுத்திய அபிவிருத்தி கருத்திட்டங்களை மீளத் தொடங்குவதற்குரிய நடவடிக்கைகளை எடுத்துள்ளோம். வெளிநாட்டு அரசுகள், முதலீட்டாளர்கள் ஆளும்தரப்பு மீது நம்பிக்கை கொண்டுள்ளார்கள். ஊழல் மோசடியால் பல ஆண்டு காலமாக இடைநிறுத்தப்பட்ட அபிவிருத்தி கருத்திட்டங்களை மீள ஆரம்பிக்கும் போது ஆரம்பத்தில் நிச்சயிக்கப்பட்ட தொகையை காட்டிலும் பன்மடங்கு கட்டணத்தை மேலதிகமாக செலுத்த நேரிடும் என்று நிதி திட்டமிடல் பிரதி அமைச்சர் ஹர்ஷன சூரியபெரும தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற நிதி சட்டம் தொடர்பில் பிரசுரிக்கப்பட்ட வர்த்தமானி அறிவித்தல்களின் ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொருளாதார மீட்சிக்கான திட்டங்களை செயற்படுத்தும் பிரதான துறையாக சுற்றுலாத்துறை கைத்தொழில் அபிவிருத்தி காணப்படுகிறது. மத்தளை விமான நிலையத்தின் ஊடாக நாட்டுக்குள் வருகைத் தரும் சுற்றுலா பயணிகள் நாட்டை விட்டு வெளியேறும் போது கட்டண அடிப்படையில் நிவாரணம் வழங்கும் நடவடிக்கைகளை விரிவுப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இலஞ்சம் மற்றும் ஊழல் மோசடிகள் இந்த நாட்டில் புற்றுநோய் போல் தீவிரமடைந்திருந்தது. கடந்த ஆளும்தரப்பில் வெளிநாட்டு அபிவிருத்தி திட்டத்தில் அமைச்சர் ஒருவர் இலஞ்சம் கோரினார் என்று கொழும்பில் உள்ள வெளிநாட்டு தூதுவர் ஒருவர் அப்போதைய ஜனாதிபதியிடம் முறைப்பாடளித்திருந்தார். இவ்வாறான நிலையே அப்போது காணப்பட்டது.

ஜப்பான்ஆளும்தரப்புஇடைநிறுத்தியஅபிவிருத்தி கருத்திட்டங்களை மீள ஆரம்பிப்பதற்கு உரிய நடவடிக்கைகளை எடுத்துள்ளோம். வெளிநாட்டு அரசுகள், முதலீட்டாளர்கள் அரசாங்கத்தின் மீது நம்பிக்கை கொண்டுள்ளார்கள். ஊழல் மோசடியால் பல ஆண்டுகாலமாக இடைநிறுத்தப்பட்ட அபிவிருத்தி கருத்திட்டங்களை மீள ஆரம்பிக்கும் போது ஆரம்பத்தில் நிச்சயிக்கப்பட்ட தொகையை காட்டிலும் பன்மடங்கு கட்டணம் செலுத்த நேரிடும்.

பொருளாதார மீட்சிக்கான சிறந்த திட்டங்களை ஆளும்தரப்பு முன்னெடுத்துள்ளது. வெளிநாட்டு முதலீடுகளுடன் புதிய அபிவிருத்தி கருத்திட்டங்களை ஆரம்பிப்போம். ஊழலற்ற வெளிப்படையான அரச நிர்வாகம் எமது வெற்றிக்கு பிரதான காரணியாக அமையும் - என்றார்.

# கிண்ணியாவில் டெங்குக் கட்டுப்பாட்டின் போது இறுக்கமான நடவடிக்கை மேற்கொள்ள கோரல்

(றிஸ்னாத்)

டெங்கு குடம்பிகளை வைத்திருப்பவர்கள் மற்றும் நுளம்புகள் பெருக்கூடிய சூழலை வைத்திருப்பவர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என கிண்ணியா பொது சுகாதார அதிகாரி வலியுறுத்தியுள்ளார். நேற்று (புதன்கிழமை) கிண்ணியா சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் இடம்பெற்ற சிறப்புக் கலந்துரையாடலில் அவர் இதனை வலியுறுத்தினார்.

இந்நிகழ்வில் திருகோணமலை பிராந்திய தொற்று நோயியல் வைத்திய அதிகாரி மற்றும் பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி, சுகாதார வைத்திய அதிகாரி அஜித் மற்றும் பொது சுகாதார பரிசோதகர்களும் பங்குபற்றினர்.



இனிவரும் காலங்களில் டெங்கு பெருகக்கூடிய சூழலை வைத்திருப்பவர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்துக்கொண்டனர்.



# யாழ். பழைய பூங்கா வளாகத்தில் இனிமேல் அரச திணைக்களங்களுக்குக் காணியில்லை

## மாவட்டச் செயலர் தெரிவிப்பு

யாழ்ப்பாணத்தில் உள்ள பழைய பூங்கா வளாகத்தில் இனிவரும் காலத்தில் எந்த திணைக்களத்துக்கும் காணி வழங்குவதில்லை எனவும், பழைய பூங்கா வளாகத்திற்கென நம்பிக்கை நிதியம் உருவாக்குவது எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பழைய பூங்கா வளாகத்தினை மேம்படுத்துதல் தொடர்பான கலந்துரையாடல் யாழ்ப்பாண மாவட்ட செயலர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் செவ்வாய்க்கிழமை மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் மாவட்ட செயலர் கருத்து தெரிவிக்கையில் -

பழைய பூங்கா வளாகமானது முதலாவது அரசாங்க அதிபர் தனியாரிடம் காணியை கொள்வனவு செய்து அரசாங்க அதிபர் பெயரில் எழுதப்பட்ட வளாகம். அவ்வளாகத்தில் உள்ள சில காணிகள் ஏற்கனவே அரச திணைக்களங்களுக்கு வழங்கப்பட்டு அலுவலகங்கள் செயற்பட்டு வருகின்றன.

வளாகத்தினை சரியான பொறிமுறைகள் ஊடாக பராமரிக்கவேண்டிய தேவைப்பாடுகள் உள்ள நிலையில், சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்காக முறையாக பேணவேண்டிய அவசியமும் உள்ளது என தெரிவித்தார்.

அதனை தொடர்ந்து, கலந்துரையாடலில் பின்வரும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

1. பழைய பூங்கா வளாகத்தில் இனி வருங்காலத்தில் எந்த திணைக்களத்துக்கும் காணி வழங்குவதில்லை என ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

2. பழைய பூங்கா வளாகத்திற்கான நம்பிக்கை நிதியம் உருவாக்குவது எனத் தீர்மானிக்கப்பட்டது.

3. வளாகத்தில் உள்ள திணைக்களங்களிலிருந்து காணிக்கான விலைமதிப்பீட்டிற்கு அமைய, வாடகை அறவிடுவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

4. பழைய பூங்கா வளாகத்தில் அமைந்துள்ள பழைய கச்சேரியின் பாதுகாப்பு கருதி வேலி அமைப்பது தொடர்பாகவும், புனரமைப்பது தொடர்பாகவும் தொல்லியல் திணைக்களத்துக்கு அறிவிப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

5. வளாகத்தில் மரக்கன்றுகளை நடுவது தொடர்பாகவும் தீர்மானிக்கப்பட்டது.

மேலும், பழைய பூங்கா வளாகத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய பராமரிப்பு தொடர்பாக மாவட்ட செயலரின் தலைமையில் நேரடியாக ஆய்வு செய்யப் பட்டது.

# உடப்பு கிராமத்தின் கரையோரம் கல் போடும் வேலைகள் ஆரம்பம்

(சியாஜ்)



புத்தளம் மாவட்டம் உடப்பு கிராமத்தில் கடந்த சில தினங்களாக தென்மேல் பருவக்காற்றின் வேகத்தால் கடலரிப்பு ஏற்பட்டுள்ளது. கடலின் கரை ஓரங்கள் பாரிய மண் குழிகளாகக் காணப்படுகின்றது. இதனால் மீனவர்களின் படகுகளை கடலில் இறக்குவது மிகவும் கஷ்டமான காரியம் எனவும் மீனவர்கள் தெரிவித்தனர்.

அதேநேரம் கடலரிப்புக்கான கற்கள் போடும் பணியும் குறிப்பிட்ட பகுதிகளில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. உடப்பு காளிகோவிலுக்கருகிலுள்ள பாலத்திலிருந்து கருங்கல் போடும் பணிகள் புதன்கிழமை காலை தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கடலோரப் பாதுகாப்பு திணைக்களத்தின் ஏற்பாட்டில் இந்தப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

பாலத்திலிருந்து வடக்குப் பக்கமாக 200மீற்றர் தூரம் வரையான இந்த கல் போடும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதனால் ஓரளவு கடலரிப்பு தடுக்கப்படும் என நம்பப்படுகிறது. கடந்த காலங்களில் இந்தக் கடலரிப்பு காரணமாக கடலோரங்களில் இருந்த வீடுகள் மற்றும் மீன் வாடிகளும் கடலுக்கு பலியாகின. அத்துடன் கடலோரத்தில் காளியம்மன் ஆலயமும் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தங்கமுலாம் துப்பாக்கி; பெண்களுக்கு மறியல்

தங்க முலாம் பூசப்பட்ட ரி-56 ரக துப்பாக்கி கண்டுபிடிக்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையதாக தெரிவிக்கப்பட்டு கைது செய்யப்பட்ட இரண்டு பெண்களையும் மே 23 வரை வெள்ளவத்தை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுக்குமாறு நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

சந்தேகநபர்கள் இருவரும் இன்று கல்கிஸ்ஸ நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டபோது, கல்கிஸ்ஸ நீதவான் ஏ.டி. சதுரிகா சில்வா இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

ஹெவ்லொக் சிட்டி வீடமைப்பு தொகுதியில் நேற்று (20) பிற்பகல் பெண்ணொருவருன் பயணப் பொதியில் இருந்து தங்க முலாம் பூசப்பட்ட வு56 ரக துப்பாக்கி கண்டுபிடிக்கப்பட்டது.

ஒரு வயதான பெண் ரி-56 துப்பாக்கியுடன் வீடமைப்பு தொகுதி நோக்கி செல்வதாக, ஹெவ்லொக் சிட்டி வீடமைப்பு தொகுதியில் இருந்த பாதுகாப்பு அதிகாரிகள், பொலிஸ் அவசர எண்ணான 119இற்கு அழைத்து தெரிவித்தனர்.

அதன்படி, வெள்ளவத்தை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உள்ளிட்ட பொலிஸ் அதிகாரிகள் குழு சம்பவ இடத்திற்குச் சென்று சோதனை செய்தபோது, தங்க முலாம் பூசப்பட்ட வு56 ரக துப்பாக்கி கண்டுபிடிக்கப்பட்டது.

இரண்டு பெண்களிடமும் துப்பாக்கி பற்றி கேட்டபோது, அது காரின் பின்புறத்தில் இருப்பதாகவும், அது ஒரு பொம்மை துப்பாக்கி என்று நினைத்து அதைக் கொண்டு வந்ததாகவும் அவர்கள் கூறியதாக பாதுகாப்பு அதிகாரி மேலும் தெரிவித்தார்.

பின்னர் பொலிஸார் வருகைதந்து துப்பாக்கியை கொண்டு வந்த 69 வயதுடைய பெண் மற்றும் அவரது மருமகளான கஜகஸ்தான் நாட்டைச் சேர்ந்த பெண்ணிடம் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

சம்பவத்தில் சந்தேகிக்கப்படும் வயதான பெண், துப்பாக்கி தொடர்பான மேலதிக விசாரணைக்காக நேற்று பிற்பகல் வெள்ளவத்தை பொலிஸாருக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

அதன்படி, சந்தேகநபர் காரில் பயணித்த பகுதிகளைச் சுற்றியுள்ள சிசிடிவி காட்சிகளைப் பயன்படுத்தி விசாரணைகள் தொடங்கப்பட்டுள்ளன.

ஹெவ்லொக் சிட்டி வீடமைப்புத் தொகுதியில் உள்ள தங்களது வீட்டிலிருந்து இரண்டு பெண்களும் பயணப் பொதியையும் வு56 ரக துப்பாக்கியையும் வெளியே எடுத்துச் செல்வதைக் காட்டும் சிசிடிவி காட்சிகள் இருப்பது தெரியவந்துள்ளது.

இதையடுத்து, பெலவத்தையில் உள்ள மருமகளின் வீட்டை பொலிஸார் சோதனை செய்து, அவரையும் துப்பாக்கி இருந்த காரையும் நேற்று இரவு 8.30 மணியளவில் வெள்ளவத்தை பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு வந்தனர்.

காரின் கதவுகள் பூட்டப்படாதபோது, யாரோ ஒருவர் துப்பாக்கியை காருக்குள் வைத்திருந்ததாக இரண்டு பெண் சந்தேக நபர்களும் பொலிஸாரிடம் தெரிவித்தனர்.

இருப்பினும், ரி-56 துப்பாக்கியை வைத்திருந்தமை மற்றும் அதற்கு உதவிய குற்றச்சாட்டின் பேரில், சம்பந்தப்பட்ட காருடன் இரண்டு சந்தேக நபர்களும் நேற்று இரவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

# சிலாபம் – கொழும்பு பிரதான வீதியில் விபத்து: 7 பேர் காயம்

(சியாஜ்)

சிலாபம்-கொழும்பு பிரதான வீதியில் உள்ள இனிகொடவெல ரயில் கடவையில் மூன்று வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன.

நேற்று (புதன்கிழமை) காலை ஏற்பட்ட விபத்தில் ஏழு பேர் காயமடைந்து சிலாபம் பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இனிகொடவெல ரயில் கடவை மூடப்பட்டிருந்த வேளையில் இரண்டு வாகனங்கள் நிறுத்தப்பட்டிருந்தன.

அந்நேரத்தில், ஒரு கொள்கலன் லொறி வந்து நிறுத்தப்பட்டிருந்த வான் மீது மோதியது, பின்னர் வான் கடந்து சென்று ஒரு பவுஸர் மீது மோதியதால் வான் பலத்த சேதமடைந்துள்ளது.

இவ்விபத்து தொடர்பில் சிலாபம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.





# ஆசியாவில் மீண்டும் கொரோனா அலை?

## இந்தியாவில் தொற்றால் 257 பேர் பாதிப்பு

(ஜிப்ரான்)

ஆசியாவில், குறிப்பாக தென்கிழக்கு ஆசியாவில் கொரோனா தொற்றால் பாதிக்கப்படுவோர் எண்ணிக்கை சமீபகாலமாக அதிகரித்து வருகிறது. தற்போது பரவி வரும் ஒமைக்ரான் பிஏ.2.86திரிபான ஜேஎன்1 வகை கொரோனா வைரஸ் பரவல் அதிகம் உள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது.

பூஸ்டர் தடுப்பூசி போட அறிவுறுத்தல்: மக்கள்தொகை நெருக்கம் மிகுந்த ஹாங்காங், சிங்கப்பூர், சீனா, தாய்லாந்து ஆகிய நாடுகளில் எடுக்கப்பட்ட மாதிரிகளில் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டதை தொடர்ந்து, முக்கிய நகரங்களில் சுகாதார துறையின் செயல்பாடுகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன. மக்கள் புதிதாக கொரோனாபூஸ்டர் தடுப்பூசி போட்டுக்கொள்ளுமாறு தாய்லாந்து, ஹாங்காங், சிங்கப்பூர் அரசுகள் அறிவுறுத்தியுள்ளன. ஹாங்காங்கில் கொரோனாபாதிப்பு அதிகமாக உள்ளது.

சமீபத்தில் மாதிரிகளை எடுத்து பரிசோதனை செய்ததில், கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டோர் விகிதம் இந்த ஆண்டில் உச்சபட்ச அளவை தொட்டுள்ளது என்று ஹாங்காங் சுகாதார பாதுகாப்பு மையம் தெரிவித்துள்ளது.

சிங்கப்பூரில் கடந்த மே 3ஆம் திகதியுடன் முடிவடைந்த வாரத்தில் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டவர்கள் எண்ணிக்கை 28 சதவீதம் அதிகரித்து 14,200 ஆக உள்ளது. மருத்துவமனையில் சேர்க்கப்படுவோர் எண்ணிக்கை சுமார் 30 சதவீதம் உயர்ந்துள்ளது என்று அந்நாட்டு சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது. தாய்லாந்தில் பெரும்பாலும் 30-39 வயதினரிடம் கொரோனாபாதிப்பு அதிகமாக உள்ளது. மே 17ஆம் திகதியுடன் முடிவடைந்த வாரத்தில் பாதிப்பு எண்ணிக்கை 33,030 ஆக அதிகரித்துள்ளது.

முந்தைய வாரத்தில் பாதிப்பு எண்ணிக்கை 16,000 ஆக இருந்த நிலையில், தற்போது இரட்டிப்பாகியுள்ளது என்று சுகாதார துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தியாவில் கொரோனா பரவல் குறித்து மத்தியசுகாதார துறை அதிகாரிகள் கூறியதாவது: இந்தியாவில் கொரோனா பரவல் கட்டுப்பாட்டில் உள்ளது. மே 19ஆம் திகதி நஷ்ஸ்ரீலவரப்படி, நாட்டில் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை 257 ஆக உள்ளது. நாட்டின் மக்கள்

தொகையை கருத்தில் கொள்ளும்போது இது மிகமிக குறைவு. தவிர, இது சாதாரண பாதிப்புதான். எனவே, வைத்தியசாலையில் அனுமதிக்க அவசியம் இல்லை. இருப்பினும், நிலைமையை மத்திய சுகாதார அமைச்சகம் தொடர்ந்து உன்னிப்பாக கண்காணித்து வருகிறது. இவ்வாறு அவர்கள் கூறினர்.

முக கவசம் அணிய சுகாதார துறை அறிவுறுத்தல்: பொதுமக்கள் பொது இடங்களில் முகக்கவசம் அணிவதுடன், சரியான தொற்று தடுப்பு வழிமுறைகளை கடைபிடிக்க வேண்டும் என்று தமிழக பொது சுகாதார துறை இயக்குநர் செல்வவிநாயகம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

'உலக சுகாதார நிறுவனம் கடந்த 4ஆம் திகதி வெளிட்ட வாராந்திர கொரோனா அறிக்கையின்படி, தெற்கு ஆசிய நாடுகளான இந்தியா, நேபாளம், வங்கதேசம், இந்தோனேசியா, தாய்லாந்து போன்ற நாடுகளில் கெரோனா பரவல் குறைவாகவே உள்ளது. மேலும், விரீயம் இழந்த ஒமைக்ரான் வைரஸின் உட்பிரிவான ஜேஎன்1 வகை தொற்றுகளே காணப்படுவதாகவும், புதிதாக உருமாறிய வைரஸ் பரவவில்லை என்றும் தெரிவித்துள்ளது. சிங்கப்பூர், வியட்நாம், பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளிலும் கெரோனா தொற்று விகிதம் குறைந்துள்ளது.

இந்தியாவிலும் இந்த ஆண்டில் கொரோனா பரவல் மிக குறைந்த அளவே காணப்படுகிறது. பாதிக்கப்பட்ட நபர்களுக்கு எவ்வித தீவிர அறிகுறிகளும் இல்லை. கொரோனா தொற்றால் எந்த உயிரிழப்பும் ஏற்படவில்லை. ஆனாலும், பொதுமக்கள் பொது இடங்களில் முகக்கவசம் அணிவதுடன், சரியான தொற்று தடுப்பு வழிமுறைகளை கடைபிடிக்க வேண்டும். அறிகுறிகள் உள்ளவர்கள், குறிப்பாக காய்ச்சல், நுரையீரல் சார்ந்த இணைநோயால் பாதிக்கப்பட்டவர்கள் அருகில் உள்ள வைத்தியரை அணுகி உரிய சிகிச்சை மேற்கொள்ள வேண்டும்' இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# இளம் தவில் வித்துவான் கிருமித்தொற்றால் சாவு

## யாழில் துயரம்

யாழ்ப்பாணம், ஆனைக்கோட்டை கூழாவடியைச் சேர்ந்த 38 வயதுடைய இளம் தவில் வித்துவான் காலமானார்.

இவர் உடல்நலக் குறைவு ஏற்பட்டு கடந்த திங்கட்கிழமை யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில், அன்றைய தினம் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இவரது மரணம் தொடர்பில் யாழ். மாவட்ட திடீர் மரண விசாரணை அதிகாரி ஆறுமுகம் ஜெயபாலசிங்கம் விசாரணை நடத்தியதையடுத்து, பிரேத பரிசோதனையில், உடலில் கிருமித்தொற்று பரவி உடற்கூறுகள் செயலிழந்தமையால் அவர் உயிரிழந்தார் என அறிக்கையிடப்பட்டுள்ளது.

உங்கள் கனவை நனவாக்க ...!
NVQ Level 3 & 4 Courses
புதிய பிரிவுகள் ஆரம்பம் 20.04.2025
கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு

•CARE GIVER COURSE (பராமரிப்பாளர் பயிற்சி)
•NURSE ASSISTANT COURSE (தாதிய உதவியாளர் பயிற்சி)
கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன் 3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்
தகுதி:
●வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
●ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
●GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி
JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY
46, Brodie Lane , Jaffna.
தொடர்பு:070 7070 722

## புத்தளம் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரச உப்புக் கூட்டுத்தாபனத்தின் ஊடாகவே உப்பு இறக்குமதி செய்யப்பட்டது. அந்த உப்பு எங்கே? எந்த தனியார் துறைக்கும் உப்பு கொண்டுவர அனுமதி வழங்கவில்லை. அண்மையிலேயே அதற்கான அனுமதி வழங்கப்பட்டது. அப்படியென்றால் அரச உப்பு கூட்டுத்தாபனம் கொண்டுவந்த உப்பு எங்கே? ஏன் இந்த உப்பு சந்தைக்கு வரவில்லை. உப்பு கட்டிகளே கொண்டுவரப்பட்டன. இவை உப்பு வர்த்தகர்களிடம் ஒப்படைக்கப்பட்டன. இதற்கு என்ன நடந்தது?

இந்தியாவில் உப்பு மெற்றிக் தொன் ஒன்றின் விலை 80 டொலர்களாகும். அதனை கொண்டுவரும் போது 40 ரூபா வரியை அறவிடுகிறது. கிலோ ஒன்றுக்கான செலவு 24 ரூபாவாகும். சகல செலவுகளையும் சேர்த்தால் ஒரு கிலோ உப்பு 100 ரூபாவுக்கு வழங்கலாம். ஆனால் சந்தையில் 350 ரூபா முதல் 400 ரூபா வரையிலான விலைக்கே விற்பனை செய்யப்படுகிறது..

உப்பை பெற்றுக்கொள்பவர்கள் யார்? புத்தளம் உப்பு கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளராக இருக்கும் ரவி லியனகேவே ரைகம் நிறுவனத்தின் தலைவராக இருக்கிறார். அவரே இறக்குமதி செய்யப்படும் உப்பு தொகையை ரைகம் நிறுவனத்துக்கு கொண்டு சென்று 350 ரூபாவுக்கு விற்பனை செய்கின்றார். உங்களின் முறை மாற்றம் புதுமையானது. முன்னர் 130 ரூபாவுக்கு விற்பனை செய்தவர்கள் இப்போது விலையை அதிகரித்துள்ளனர். அதேபோன்று கணக்காய்வாளர் நாயகம் ஒருவரை நியமித்துக்கொள்ள ஆளும்தரப்புக்கு முடியாமல் இருகிறது. இந்தம‘ துறையில் 5 வருடம் அனுபவமுள்ள பெற்றோலிய கூட்டத்தாபனத்தின் பணிப்பாளர் நாயகத்தை நியமிப்பதற்கே ஆளும்தரப்பு முயற்சித்து வருகிறது. எனவே நுகர்வோர் அதிகார சபை புறக்கோட்டையில் உள்ள பெட்டிக்கடைகளில் சோதனை நடத்தாமல் அம்பாந்தோட்டை மற்றும் புத்தளத்திற்கு சென்று முடிந்தால் உப்பு எங்கே உள்ளது என்று பரிசோதனை செய்யட்டும்.

## பிரம்டன் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் சிறிதரன், இது குறித்து கனேடியப்பிரதமர் மார்க் கார்னி மற்றும் பிரம்டன் நகர மேயர் பற்றிக் பிரவுன் ஆகியோருக்கு எழுதிய கடிதத்தையும் உயர்ஸ்தானிகரிடம் கையளித்தார்.

இலங்கைக்கானகனேடியஉயர்ஸ்தானிகர் எரிக் வோல்ஷை நேற்று கொழும்பிலுள்ள கனேடிய உயர்ஸ்தானிகரகத்தில் சந்தித்த சிறிதரன், இச்சந்திப்பின்போதே தமிழ் மக்கள் சார்பில் தனது நன்றியை வெளிப்படுத்தினார்.

அதேவேளைஏற்கனவேகனேடியபிரதமர் மற்றும் பிரம்டன் நகர மேயருக்கு நன்றியை வெளிப்படுத்திகடந்த 19 ஆம் திகதி மின்னஞ்சல் ஊடாக அனுப்பிவைத்த கடிதத்தையும் உயர்ஸ்தானிகரிடம் நேரில் கையளித்தார். அக்கடிதத்தில் கூறப்பட்டிருப்பதாவது:

இலங்கைத்தீவின் அளவிற் சிறிய தேசிய இனமாக அடையாளப்படுத்தப்படும் தமிழ்த்தேசிய இனம் மீது, இலங்கை அரசால் வலிந்து மேற்கொள்ளப்பட்ட மனிதப் பேரவலத்தை ‘இனப்படுகொலை‘ என்று ஏற்றுக்கொண்ட முதலாவது நாடான கனடாவின் பிரம்டன் நகரில், தமிழினப் படுகொலை நினைவுத்தூபி நிறுவப்பட்டு, வலிசுமந்த மாதமான மே மாதத்தில்; திறந்துவைக்கப்பட்டுள்ளமை, பாதிக்கப்பட்ட எமது மக்களின் மனக்காயங்களுக்கு மருந்தாய் அமைந்துள்ளதை நன்றியோடு பதிவுசெய்கிறேன்.

ஈழத்தமிழர்கள் மீது நிகழ்த்தப்பட்ட போரின் அறமீறல்கள் குறித்தும், போர் முடிவுற்றதன் பின்னரான கடந்த 15 ஆண்டுகளில் எமது மக்களின் பாரம்பரிய வாழ்விடங்கள் மீதும், கூட்டுப் பண்பாடுகள் மீதும் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற கட்டமைக்கப்பட்ட இனஅழிப்புச்செயற்பாடுகள் தொடர்பிலும்; கரிசனையோடிருக்கும் கனேடிய அரசினால், ஈழத் தமிழினம் சார்ந்து சமகாலத்தில் முன்னகர்த்தப்படும் காத்திரமான செயல்களும், அறிவிப்புகளும் சர்வதேச அரங்கிலும், தமிழ் மக்கள் மனங்களிலும்தாக்கத்தைஏற்படுத்தியுள்ளதை உணரமுடிகிறது.

தங்கள்; மீது மேற்கொள்ளப்பட்ட இன அழிப்பு நடவடிக்கைகளுக்கு பரிகார நீதியைக் கோரிநிற்கிற எங்கள் இனம், கடந்த 15 ஆண்டுகளாக ஏமாற்றங்களை மட்டுமே எதிர்கொள்ள நேர்ந்திருக்கிறது. இலங்கைத் தீவில் தமிழர்கள் மீது நிகழ்த்தப்பட்டது இனப்படுகொலை தான் என்பதை ஏற்றுக்கொள்ளத் தலைப்படாத உலக அரங்கில், ‘இலங்கையில் நிகழ்ந்தது இனப்படுகொலையே‘ என்பதை பகிரங்கமாக ஏற்றுக்கொண்டதோடு, இறுதிப்போரின் போது கொல்லப்பட்டோருக்காகவும், மனித உரிமை மீறல்களைச் சந்தித்தோருக்காகவும் தொடர்ந்து நீதிகேட்கும் கனடா, தனது நாட்டின் முதன்மை நகரான பிரம்டனில் ஈழத்தமிழர்களின் அரசியல் தாகத்தை சொல்லும் தமிழீழக் குறியீட்டுடன் கூடிய நினைவுத்தூபியை நிறுவியமையும், தமிழ் இனப்படுகொலையைஏற்றுக்கொள்ளாதவர்கள் கனடாவிலிருந்து தாராளமாக வெளியேறலாம் என்ற பிரம்டன் நகர மேயரின் அறிவிப்பும் ஈழத்தமிழர்களுக்கான நீதியின் முகமாக கனடாவை அடையாளப்படுத்தியிருக்கிறது.

ஈழத்தமிழர்கள் மீதான இனப்படுகொலையின் நேரடிக் குற்றவாளிகளான இலங்கையின் முன்னாள் ஜனாதிபதிகள் இருவர் மற்றும் இராணுவப் பின்புலம் கொண்டவர்களுக்கு எதிராக பொருளாதாரத் தடை விதித்தமை, தமிழினப்படுகொலை நினைவேந்தல் அனுஷ்டிப்பு, நினைவுத்தூபி அமைப்பு, உயிர் அச்சுறுத்தல்களால் புலம்பெயரும் ஈழ அகதிகளுக்கு அரசியல் தஞ்சம் வழங்கல் என ஈழத்தமிழர்கள் சார்ந்து தங்களால் முன்னெடுக்கப்படும் அத்தனை செயல்களும், எமது இனத்தின் அரசியல் விடுதலையில் கனடா நாட்டின் பங்களிப்பு கனதிமிக்கதாக இருக்கும் என்ற பரிபூரண நம்பிக்கையை எமக்கும் எமது மக்களுக்கும் வழங்கியிருக்கிறது.

அந்த நம்பிக்கைக்கான சாட்சியமாக, இனப்படுகொலைக்கான நீதியைப் பெறுவதிலும், எமது மக்களுக்கான நிரந்தர அரசியல் தீர்வைப் பெற்றுக்கொடுப்பதற்கான எதிர்கால நடவடிக்கைகளிலும் தங்களது இராஜதந்திர வழிகாட்டுதல்கள் மற்றும் மூலோபாயங்கள் எமக்கு துணைசெய்யும் என்ற நம்பிக்கையின் செய்தியாக, மீளவும் ஈழத்தமிழர்கள் சார்பிலான நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன் என அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## காணி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வலியுறுத்தியுள்ளனர்.

இந்நிலையில் பூர்வீக காணிகளை சட்ட ரீதியாகப் பாதுகாப்பதற்குத் தம்மிடம் இலவச சட்ட ஆலோசனை பெறுமாறும், இந்த இலவச சட்ட ஆலோசனையை வழங்குவதற்காகத் தன்னார்வ அடிப்படையில் சட்டத்தரணிகள் பலர் முன்வந்திருக்கின்றனர் எனவும் சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து சுமந்திரன் அவரது உத்தியோகபூர்வ பேஸ்புக் பக்கத்தில் செய்திருக்கும் பதிவில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:

காணி நிர்ணயக் கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் 28.03.2025 அன்று வெளியான வர்த்தமானியின் தொடர்ச்சியானநடவடிக்கைகள்தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருப்பதாக மே 18 காணி அமைச்சினால் ஊடகங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் உங்களது காணியை நீங்கள் எவரும் உரிமை கோரவில்லை எனில், அந்த நிலம் அரசுக்குச் சொந்தமானது எனக் கட்டாயமாகப் பிரகடனம் செய்யப்படும் என காணிநிர்ணயக்கட்டளைச்சட்டத்தின் 5(1) ஆம் பிரிவு கூறுகின்றது. எனவே உங்களது நில உரிமையை இழந்துவிடாமல் பாதுகாப்பதற்கு இப்போதே நடவடிக்கை எடுங்கள்.

அதேவேளை இது தொடர்பாக வெளிநாடுகளில்அல்லதுதூரப்பிரதேசங்களில் வசிக்கும் காணி உரிமையாளர்கள் தமது உரித்தை நிரூபிப்பதற்கான ஆவணத் தயாரிப்புக்களை மேற்கொள்ளவுள்ளோம் - என்றுள்ளது.

## மருத்துவப் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என சர்வதேச மாநாட்டில் தெரிவித்துள்ள அமைச்சர் எங்கள் சுகாதார பணியாளர்களை உருவாக்குவதற்கு பெருமளவு பணத்தை செலவிட்ட பின்னர் நாங்கள் தற்போது குறிப்பிடத்தக்க நிதி இழப்பை எதிர்கொள்ளவேண்டியுள்ளது என தெரிவித்துள்ளார்.

# ஓட்டமாவடியை சோகத்தில் ஆழ்த்திய அடுத்தடுத்து நிகழ்ந்த மூன்று சாவுகள்

(பர்ஸான்)

ஒருவருக்கு இறப்பு எங்கே வரும்? எப்போது வரும்? எப்படி வரும்? என்று யாருக்கும் தெரியாது. இந்த உலகில் மறுக்கவோ! தடுக்கவோ! முடியாத ஒரு சம்பவமாக மரணம் இருக்கிறது.

சில மரணங்கள் ஆச்சரியமாகவும், அபூர்வமாகவும் இவ்வுலகில் நிகழ்கின்றன.

இந்நிலையில்தான், ஓட்டமாவடி பகுதியில் அடுத்தடுத்து நிகழ்ந்த மூன்று மரணங்கள் அப்பகுதியை ஆழ்ந்த சோகத்தில் ஆழ்த்தியுள்ளன.

ஓட்டமாவடி முதலாம் வட்டாரம் பஸார் பள்ளிவாசல்வீதியில்வசித்துவந்தபெண்ணொருவர் சிலநாள்களுக்குமுன்னர்மரணமடைந்திருக்கலாம் என சந்தேகத்தில் கடந்த வியாழக்கிழமை 15 ஆம் திகதி ஜனாஸாவாக மீட்கப்பட்டமை அப்பகுதியை பெரும் சோகத்தில் ஆழ்த்தியது.

59 வயதுடைய செய்யது முகம்மது ஆசியா முத்து (பல்கீஸ்) என்பவர் அவரது வீட்டில் தனிமையில் வாழ்ந்து வந்துள்ளார்.

சில நாள்களாக நோய்வாய்ப்பட்ட நிலையில் வாழ்ந்துவந்தஅவர்அவரதுவீட்டில்மரணமடைந்த நிலையில் ஜனாஸாவாக மீட்கப்பட்டார்.

அயலவர்களுக்கு துர்வாடை வீசிய போது அங்கு சென்று பார்த்தபோது பெண்ணின் உடல் உருக்குலைந்த நிலையில் காணப்பட்டுள்ளது.

அவ்விடத்துக்குச் சென்ற வாழைச்சேனை பொலிஸார், திடீர் மரண விசாரணை அதிகாரி, சுகாதார பரிசோதகர்கள் மற்றும் சமூக மட்ட அமைப்பிர்கள் ஒன்றிணைந்து தொற்றுநீக்கி தெளித்து ஜனாஸாவை மீட்டு அன்றைய தினம் அஸர் தொழுகையின் பின்னர் ஓட்டமாவடி முகைதீன் ஜும்ஆப் பள்ளிவாசல் மையவாடியில் நல்லடக்கம் செய்தனர்.

அருகருகே வீடுகள் இருந்தும், சனநடமாட்டம் கூடியவீதியாகஇருந்தும்இப்பெண்மரணமடைந்த நிலையிலும் கவனிப்பாறற்றுக் கிடந்தது பெரும் பேசு பொருளாக மாறியது.

**சந்தியாற்றில் மாணவன் மரணம்!**

ஓட்டமாவடி-காவத்தமுனைபகுதியால்செல்லக் கூடிய வயல் பகுதிதான் சந்தியாறு பகுதியாகும். இங்குவயலுடன்சேர்ந்துநீரோடைகாணப்படுகிறது. விடுமுறை நாள்களில் குடும்பத்தினர், நண்பர்கள் அங்கு சென்று உணவு சமைத்து உட்கொண்டு, குளித்து தங்களது மகிழ்ச்சிகளை வெளிப்பத்தி வருகின்றனர்.

இந்நிலையில்தான், அங்கு நீராடிய பாடசாலை மாணவன் ஒருவன் நீரில் மூழ்கி மரணமடைந்துள்ளமை ஓட்டமாவடி பிரதேசத்தில் பரபரப்பை ஏற்படுத்தியது. இந்தச் சம்பவம் நடந்தது ஞாயிற்றுக்கிழமை ஆகும்.

ஓட்டமாவடிதேசியபாடசாலையில்உயர்தரத்தில் விஞ்ஞானப் பிரிவில் கல்வி கற்று வரும் அஸ்லூப் எனும் மாணவனே இவ்வாறு நீரில் மூழ்கி மரணமடைந்துள்ளார்.

அன்றைய தினம் நண்பர்களோடு பொழுது போக்கிற்காக சென்ற போதே இந்த துயரச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மோட்டார்சைக்கிளில்நண்பர்களோடுஅஸ்லூப் சென்ற போது ஓர் இடத்தில் தலைக் கவசத்தை வாங்கிச்சென்றுள்ளார். தலைக்கவசத்தைவாங்கிய நபரிடம் நான் தலைக் கவசத்தை கொண்டு வர மாட்டேன். எனது நண்பர்கள்தான் அதனைக் கொண்டு வருவார்கள் என சிரித்துக் கொண்டு தனது மரணத்தை அறிந்து வைத்தால்போல் கூறிவிட்டுச் சென்றதை ஜனாஸா தொழுகையின் போது உரை நிகழ்த்திய மௌலவி மஜீத் சிறாஜி கூறினார்.

ஆசிரியர் அபூபக்கர் அலிகான், மகுமூது லெப்பை மர்ழியா தம்பதிகளின் ஒரேயொரு பிள்ளைதான் மரணமடைந்த மாணவன் அஸ்லூப். அவர் மரணிக்கும் போது அவரது தந்தை அலிகான் டுபாய் நாட்டில் தொழில் புரிந்து வந்துள்ளார்.

மகனின் மரணச் செய்தியை அறிந்து கொண்ட ஆசிரியர் அலிகான் செய்வதறியாது பதறிக் கொண்டு டுபாய் நாட்டிலிருந்து தனது மகனின் ஜனாஸா நல்லடக்கத்தில் கலந்து கொண்டார்.

பெருந்திரளான மாணவர்கள், பொதுமக்களின் பங்கு பற்றுதலுடன் மாணவன் அஸ்லூப்பின் ஜனாஸா திங்கட்கிழமை அஸர் தொழுகையின் பின்னர்ஓட்டமாவடிமுகைதீன்ஜும்ஆப்பள்ளிவாசல் மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

மாணவன் அஸ்லூப்பின் ஜனாஸா நல்லடக்கத்தின்போது அங்கிருந்த மக்கள் மத்தியில் மற்றுமொரு பரபரப்பு செய்தி வந்தடைந்தது. ஓட்டமாவடி - நாவலடி பகுதியில் விபத்தாம் ஒருவர் மரணமாம் என்று அந்த செய்தி கிடைத்து.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஓட்டமாவடி - நாவலடி பிரதான வீதியில் பயணித்த டிப்பர் - உழவு இயந்திரம்- மோட்டார் சைக்கிள் ஆகியவை திங்கட்கிழமை விபத்துக்குள்ளாகின.

இதில், உழவு இயந்திரத்தை செலுத்திச் சென்ற ஓட்டமாவடி - மீராவோடை நூராணியா வீதியைச் சேர்ந்த 50 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையான அப்துல் மஜீத் முகம்மது பாறூக் என்பவர் சம்பவ இடத்திலே மரணமடைந்துள்ளார்.

மரணமடைந்த நபரின் ஜனாஸா பரிசோதனைக்காக வாழைச்சேனை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு, பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

ஜனாஸா மீராவோடை செவ்வாய்க்கிழமை தொழுகையின் பின்னர் மீராவோடை மீரா ஜும்ஆப் பள்ளிவாசல் மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

ஓட்டமாவடி பகுதியில் அடுத்தடுத்து நிகழ்ந்த இந்த மூன்று மரணங்களும் அவர்களது குடும்பங்களுக்கு மாத்திரம் அல்லாமல் பிரதேசம் முழுவதையும் பெரும் சோகத்தில் ஆழ்த்தியது.

மரணம் தடுக்கப்படாத ஒரு சம்பவமாக இருந்தாலும் நாம் செல்லும் இடங்கள் பற்றி நன்கு அறிந்திருக்க வேண்டியதும், வாகனங்களில் பயணிக்கும்போதுவீதிஒழுங்குகளைகடைப்பிடித்து வேகக் கட்டுப்பாட்டுடன் செல்லுவதும் காலத்தின் கட்டாயமாகும்.

## வர்த்தமானியை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எவரும் உரிமைகோராதுவிடின், அவை அரச காணிகளாகப் பிரகடனப்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இவ்வர்த்தமானி அறிவித்தல்தொடர்பில்கடுமையானஎதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ள தமிழ்த்தேசிய அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், அதனை உடனடியாக வாபஸ் பெறுமாறும் ஆளும்தரப்பை வலியுறுத்தியுள்ளனர்.

அதனையடுத்து ஆளும்தரப்பு அவ்வர்த்தமானி அறிவித்தலில் உள்ள விடயங்களை நடைமுறைப்படுத்துவதைத் தற்காலிகமாக இடைநிறுத்துவதாக கடந்த ஞாயிற்றுக்கிழமை அறித்தது.

இவ்வாறானதொரு பின்னணியில் இவ்வர்த்தமானி அறிவித்தல் தொடர்பில் எழுந்திருக்கும் முரண்பாடுகள் குறித்துக் கலந்துரையாடும் நோக்கில் நாளைய மு.ப 11.00 - பி.ப 1.00 மணி வரை நாடாளுமன்றத்தில் தனது தலைமையில் நடைபெறவிருக்கும்சந்திப்பில்பங்கேற்குமாறு பிரதமர் ஹரினி அமரசூரிய வடக்கு, கிழக்கு மாகாணங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் எதிர்க்கட்சிப்நாடாளுமன்றஉறுப்பினர்களுக்கு அழைப்புவிடுத்துள்ளார்.

அதன்படி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சார்பில் இச்சந்திப்பில் பங்கேற்கவிருப்பதாகத்தெரிவித்தஅக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார், ஆளும்தரப்பு எத்தகைய காரணங்களை முன்வைத்தாலும், இவ்வர்த்தமானி அறிவித்தல் வாபஸ் பெறப்படவேண்டும் என்ற நிலைப்பாட்டில் தாம் உறுதியாக இருக்கிறார் எனக் குறிப்பிட்டார்.

அத்தோடு ஆளும்தரப்புக்கு உண்மையிலேயே வட, கிழக்கிலுள்ள காணிகளை அபகரிக்கும் நோக்கம் இல்லை எனில், அவர்கள் மக்கள் முகங்கொடுத்துவரும் காணிப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கே விரும்புகிறார்கள் எனின், அதற்கென விசேட ஆணைக்குழுவொன்றை அமைத்து உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்கமுடியும் என இச்சந்திப்பின்போது தான் சுட்டிக்காட்டுவார் எனவும் கஜேந்திரகுமார் தெரிவித்தார்.

## மின்சாரசபை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சட்டமூலம் இலங்கை மின்சார சபையை நான்கு நிறுவனங்களாக மறுசீரமைக்க முன்மொழிகிறது. இவை அனைத்தும் முழுமையாக அரசுக்குச் சொந்தமானதாக அமையும்.

வலுசக்தி துறையில் செயற்றிறன் மற்றும் சேவை வழங்கலை மேம்படுத்துவதற்கான சீர்திருத்தங்களின் விரைவு மற்றும் முக்கியத்துவத்தை வலியுறுத்தி, சட்டமூலம் விரைவில் நாடாளுமன்றத்தில் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படும் என்றும் அமைச்சு அறிவித்துள்ளது.

# மக்கள் மீண்டும் இனரீதியாக பிளவுபடுவதற்கு இடமளியாதீர்

## கனேடிய உயர்ஸ்தானிகரிடம் அமைச்சர் சந்திரசேகரன் வலியுறுத்து

கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் மற்றும் இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் எரிக் வால்ஷ் ஆகியோருக்கிடையில் நேற்று (புதன்கிழமை) கொழும்பில் அமைச்சகத்தில் விசேட சந்திப்பொன்று இடம்பெற்றது.

அமைச்சர் சந்திரசேகர், உயர்ஸ்தானிகரை அன்புடன் வரவேற்று, இலங்கையின் மீனவ சமூகம் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், எதிர்கால அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் குறிப்பாக வடக்கு மக்களின் வாழ்வாதாரப் பிரச்சினைகள் குறித்து விரிவாகக் கலந்துரையாடினர்.

அபிவிருத்தியில் பின்தங்கிய சமூகமாக வாழும் வடக்கு மக்களின் நிலை குறித்து இங்கு கருத்துத் தெரிவித்த அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், 30 வருட கால யுத்தத்திற்குப் பின்னரும் வடக்கு மக்கள் இன்னும் முறையான கவனம் செலுத்தப்படாமல் வாழ்ந்து கொண்டிருப்பதாக வலியுறுத்தினார்.

கடந்த கால அரசுகள் தமிழ் மக்களைப் பெரும்பாலும் புறக்கணித்ததாகவும், தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் எந்தப் பாகுபாடுமின்றி அந்த மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த பாரிய அபிவிருத்தித் திட்டங்களை அமுல்படுத்த உறுதிபூண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். ஊழல், மோசடி மற்றும் இனவாதம் அற்ற ஒரு நாட்டை உருவாக்குவதே தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் முக்கிய நோக்கம் என அமைச்சர் மீண்டும் வலியுறுத்தினார்.

வடக்கில் உள்ள பல சமூகங்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழ்வதாகவும், 40வீத பேர் இன்னும் தற்காலிக கொட்டில்களில் வசிப்பதாகவும் அமைச்சர் விளக்கினார். பெற்றோரை இழந்த பிள்ளைகள், விதவைகள் மற்றும் பல முதியோர் ஆதரவற்ற நிலையில் இருப்பதாகவும் அவர் வலியுறுத்தினார். மேலும், 60வீத மக்கள் கடன்பட்டு வாழ்வதாகவும், கடனைத் திருப்பிச் செலுத்த பெரும் சிரமங்களை அனுபவிப்பதாகவும், வன்னிப் பிரதேசத்தில் பெண்கள் தற்கொலை செய்துகொள்வது அதிகரிப்பதற்கு இதுவே முக்கிய காரணம் எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

கடற்றொழிலில் ஈடுபடும் மக்கள் எதிர்கொள்ளும் சவால்கள் குறித்தும் அமைச்சர் சந்திரசேகர் கலந்துரையாடினார். அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த அரசு தீவிரமாகச் செயற்பட்டு



வருவதாகவும் அவர் தெரிவித்தார். வடக்கு மற்றும் தெற்கு மீனவர்கள் எந்தப் பாகுபாடும் இல்லாமல் தமது தொழிலில் ஈடுபட்ட ஒரு காலம் இருந்ததாகவும், ஆனால் பாகுபாடு அரசியல் இலங்கையில் இனவாதத்தை வளர்த்து தேசிய ஒற்றுமையைச் சீர்குலைத்ததாகவும் அவர் கவலை தெரிவித்தார்.

நாட்டில் நல்லிணக்கத்தையும் ஒற்றுமையையும் கட்டியெழுப்ப அரசாங்கம் பெரும் முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக அமைச்சர் வலியுறுத்தினார். எந்த வடிவத்திலும் இனவாதத்திற்கு இனி இடமளிக்கப்படமாட்டாதுஎனஅவர்திட்டவட்டமாக அறிவித்தார். அரசாங்கத்தின் செயற்பாடுகளைக் குழப்ப மீண்டும் இனவாதப் பிரிவுகளைத் தூண்டிவிட உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் சில தீய சக்திகள் முயற்சிப்பதாகவும் அவர் கவலை தெரிவித்தார். மக்களை மீண்டும் இனரீதியாகப் பிளவுபடுத்தும் எந்தவொரு செயற்பாடுகளுக்கும் இடமளிக்க வேண்டாம் என கனேடிய உயர்ஸ்தானிகரிடம் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

கனேடிய உயர்ஸ்தானிகர் எரிக் வால்ஷ், இலங்கையின் நல்லிணக்க முயற்சிகளுக்கு கனடாவின் முழு ஆதரவை வழங்குவதாகக் கூறினார். ஊழல் மற்றும் மோசடிகளுக்கு எதிராகப் போராடுவதற்கு தேசிய மக்கள் சக்தி பெற்ற வலுவான மக்கள் ஆணையை அவர் குறிப்பாகப் பாராட்டினார். இந்த முயற்சிகளுக்கு கனடாவின் தொடர்ச்சியான ஆதரவை வெளிப்படுத்தினார். புதிய அரசாங்கத்தை சர்வதேச சமூகம் வரவேற்றுள்ளதாக உயர்ஸ்தானிகர் குறிப்பிட்டார். கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற தேசிய படைவீரர்கள் தினத்தில் ஜனாதிபதி ஆற்றிய உரையையும் அவர் பாராட்டினார்.



நேற்று தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்ட கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சின் புதிய செயலாளர், கலாநிதி பீ கே. கோலித்த கமல் ஜீனதாச, பொருளாதார பிரச்சினையால் பாதிக்கப்பட்ட மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த திட்டமிடப்பட்டுள்ள மீன் வளர்ப்பு அபிவிருத்தித் திட்டங்களுக்கு ஆதரவு வழங்குமாறு கனேடிய உயர்ஸ்தானிகரிடம் கேட்டுக்கொண்டார். குறிப்பாக, கடல் அட்டை வளர்ப்பு மையங்களை நிறுவுவதற்கும், தனியார்-பொதுப் பங்காளித்துவங்களை ஊக்குவிப்பதற்கும் முன்னுரிமை வழங்கப்படும் இந்தத் திட்டங்களுக்கான நிதி நிறுவனங்களைக் கண்டறிவதற்கு கனடாவின் ஆதரவு மிகவும் முக்கியமானது என செயலாளர் வலியுறுத்தினார். மேலும், கடல் அட்டை வளர்ப்பு மற்றும் ஏற்றுமதியை மேம்படுத்துவதற்கும், களு கங்கை நீர்த்தேக்கத்தில் புதிய மீன் வளர்ப்புத் திட்டங்களுக்கான முதலீட்டு வாய்ப்புகளையும் கருத்தில் கொள்ளுமாறும் அவர் கோரினார்.

கனடாவின் வலுவான மீன்பிடித்துறையையும், மேம்பட்ட மீன் வளர்ப்புத் தொழில்நுட்பத்தையும் முன்னிலைப்படுத்திய உயர்ஸ்தானிகர் வால்ஷ், எதிர்காலத்தில் இந்தத் துறைகள் தொடர்பான கலந்துரையாடல்களைத் தொடர ஆர்வமாக இருப்பதாகத் தெரிவித்தார்.

இச்சந்திப்பில் கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் எரிக் வால்ஷ், கொழும்பில் உள்ள கனேடிய உயர்ஸ்தானிகராலயத்தின் இரண்டாவது செயலாளர் பற்றிக் பிக்கரிங், மற்றும் கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சின் செயலாளர் கலாநிதி பீ. கே. கோலித்த கமல் ஜீனதாச ஆகியோர் கலந்து கொண்டனர்.




## திகாமடுல்ல மீடியா போரத்திற்கு புதிய நிர்வாகம்

அம்பாறை மாவட்டத்தில் உள்ள அச்சு ஊடகங்கள், மின்னணு ஊடகங்களில் கடமையாற்றும் ஊடகவியாளர்கள், பிராந்திய செய்தியாளர்கள் மற்றும் சுயாதீன மற்றும் ஏனைய ஊடகவியலாளர்களின் நலன் கருதி ‘திகாமடுல்ல மீடியா போரம்‘ எனும் அமைப்பு உதயமாகியுள்ளது.

இதன் அங்குரார்ப்பண நிகழ்வு திங்கட்கிழமை அக்கரைப்பற்றில் இடம்பெற்றது.

அத்துடன் உத்தியோகபூர்வமான நிர்வாக சபையும் சபையோரின் ஏகோபித்த பிரகாரம் அங்கீகரிக்கப்பட்டது.

தலைவராக சிரேஷ்ட. ஊடகவியலாளர் எம்.எப் றிபாஸ்,

பொதுச் செயலாளராக எஸ்.சினீஸ் கான் ஆகியோர் செய்யப்பட்டதுடன் ஏனைய நிருவாக உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர்.

# முல்லைத்தீவில் சட்டவிரோதமானமுறையில் மீன்பிடித் தொழில் ஈடுபட்ட அறுவர் கைது

முல்லைத்தீவு, கொக்குதொடுவாய் கடற்கரை பகுதியில் சட்டவிரோதமான முறையில் சுருக்குவலை தொழிலில் ஈடுபட்டிருந்த ஐந்து மீன்பிடி படகு, இரண்டு சுருக்குவலைகளுடன் ஆறுபேர் கைது செய்யப்பட்ட சம்பவம் ஒன்று நேற்று (புதன்கிழமை) இடம்பெற்றுள்ளது.

முல்லைத்தீவு, கொக்குதொடுவாய் கடற்கரை பகுதியில் சட்டவிரோத மீன்பிடித் தொழில் இடம்பெறுவதாக கடற்தொழில் திணைக்களத்தினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து குறித்த இடத்திற்கு சென்ற கடற்தொழில் திணைக்களத்தினர் , கடற்படையினர் சட்டவிரோத தொழிலில் ஈடுபட்டிருந்த ஐந்து மீன்பிடி படகுகளையும், இரண்டு தடை செய்யப்பட்ட சுருக்கு வலைகளுடன் ஆறு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த சட்டவிரோத மீன்பிடிக்கு வெளிச்சத்தை பாய்ச்சிய படகுகள் பற்றிய விசாரணைகளை கடற்தொழில் திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது. அத்தோடு கைது செய்யப்பட்ட ஆறுநபர்களும் நேற்றையதினம் முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.

புத்தள மாவட்டத்தைச் சேர்ந்த ஐந்து நபர்களும் கொக்குதொடுவாய் பகுதியை சேர்ந்த ஒருவருமாக ஆறுபேர் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.








## திருகோணமலை மாவட்ட செயலகத்தில் மனக்குறை தீர்க்கும் பொறிமுறை நிகழ்ச்சி.

(ஹஸ்பர்)

மாவட்ட மற்றும் பிரதேச செயலக மட்டங்களிலுள்ள மனக்குறை தீர்க்கும் குழு உறுப்பினர்களுக்கும், மனக்குறை தீர்க்கும் பொறிமுறையில் ஈடுபட்டுள்ள நலன்புரி நன்மைகள்  தகவல் பிரிவு அதிகாரிகளுக்கும், மனக்குறை தீர்க்கும் பொறிமுறையின் விழிப்புணர்வு நிகழ்ச்சியானது கடந்த செவ்வாய்க்கிழமை திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் டபிள்யூ.ஜி.எம். ஹேமந்த குமார தலைமையில் மாவட்ட செயலக பிரதான மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

மனக்குறை தீர்க்கும் பொறிமுறை என்பது 'அஸ்வெசும' சமூக நலன்புரி கொடுப்பனவுகளை பெற்றுக்கொள்ளும் வகையில் விண்ணப்பங்களை சமர்ப்பிப்பது முதல் கொடுப்பனவுகளை வழங்குவது வரை பல்வேறு செயற்பாடுகளுடன் வேறுபட்ட வழிகளில் பாதிக்கப்பட்ட ஃ அசௌகரியத்திற்கு உள்ளான பயனாளிகள் மற்றும் பொதுமக்கள் உட்பட அனைத்து பங்குதாரர்களுக்கும் குறைகள் மற்றும் கோரிக்கைகள் என்பனவற்றை சமர்ப்பித்து அதற்கான தீர்வுகளைப் பெறும் வழிமுறையாகும்.

இச்செயற்பாட்டின் போது பாதிக்கப்பட்ட தரப்பினரால் சமர்ப்பிக்கப்படும் அவர்களது குறைகள் அல்லது கோரிக்கைகளிலிருந்து அவற்றைப் பதிவு செய்தல், வரிசைப்படுத்துதல், ஒவ்வொரு மட்டத்திலும் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் மற்றும் அமைக்கப்பட்டுள்ள குழுக்களைப் பரிந்துரை செய்தல், பரீட்சித்தல், குழுக்களால் வழங்கப்படும் தீர்வுகளை செயல்படுத்துதல், பின்தொடர்தல், பதிவுகளை பராமரித்தல் மற்றும் தரவு முறைமையில் உள்ளிடுதல் வரையென முழுச் செயன்முறையையும் கொண்டுள்ளது.

இந்த பொறிமுறையானது 'அஸ்வெசும' சமூக நலன்புரி நன்மைகள் திட்டத்தின் பயனாளிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மிகக் குறைந்த நிர்வாக அலகான கிராம உத்தியோகத்தர் பிரிவிலிருந்து பிரதேச செயலகம், மாவட்ட செயலகம் மற்றும் தேசிய மட்டம் வரை ஒவ்வொரு மட்டத்தையும் உள்ளடக்கும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

இதன்போது  நலன்புரி நன்மைகள் சபையின் சமூக பாதுகாப்பில் விசேடத்துவம் உபுல் பிரம்மனகே, மனக்குறை தீர்த்தலில் விசேடத்துவம் அமில பிரியங்க மற்றும்  தொழில்நுட்ப விசேடத்துவம் சுஜாத் ஆகியோர் வளவாளர்களாக கலந்து கொண்டு சிறப்பித்திருந்தனர்.

இந்நிகழ்வில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.சுதாகரன், உதவி பிரதேச செயலாளர்கள், பிரதித் திட்டமிடல் பணிப்பாளர்கள், உதவி திட்டமிடல் பணிப்பாளர்கள், அஸ்வெசும மாவட்ட ஒருங்கிணைப்பாளர் எஸ்.லிங்கேஸ், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப உத்தியோகத்தர் எம்.ஆர்.எம். நபீல், நலன்புரி சபையில் கடமையாற்றுகின்ற உத்தியோகத்தர்கள், துறைசார்ந்த உத்தியோகத்தர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.





# முழங்காவிலில் சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிய குளிர்பான நிலையத்துக்கு ரூ. 50 ஆயிரம் தண்டம்

பூநகரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக் குட்பட்ட முழங்காவில் பகுதியில் இயங்கும் குளிர்பான நிலையம் சுகாதார சீர்கேட்டுடன் இயங்கி வருகின்றமை அவதானிக்கப்பட்டு, முழங்காவில் பொது சுகாதார பரிசோதகர் இ. தர்மிகன் இனால் ஏற்கனவே பல தடவைகள் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டது.

இந்நிலையில் பூநகரி மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர் ஜெ. றொனால்ட் தலைமையில் முழங்காவில் பொது சுகாதார பரிசோதகர் இ. தர்மிகனும் இணைந்து கடந்த 24.04.2025 ஆம் திகதி பரிசோதனை மேற்கொண்டனர். இதன்போது தொடர்ந்தும் சுகாதார சீர்கேடுகளுடன் குறித்த குளிர்பான நிலையம் இயங்கி வருகின்றமை அவதானிக்கப்பட்டது.

இதனையடுத்து குளிர்பான உரிமையாளரிற்கு எதிராக செவ்வாய்க்கிழமை கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில் 10 குறைபாடுகளுடன் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. வழக்கினை அன்றையதினமே விசாரணைக்கு எடுத்துகொண்ட நீதிவான் குளிர்பான உரிமையாளரை குற்றவாளியாக இனங்கண்டு 50 ஆயிரம் ரூபா தண்டம் விதித்ததுடன், கடுமையான எச்சரிக்கையும் வழங்கினார்.



# தேசிய டெங்கு ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு கல்முனை பகுதியில் பரிசோதனைகள் தீவிரம்

(பாறுக் ஷிஹான்)



சுகாதார அமைச்சால் அம்பாறை மாவட்டத்தில் இனங்காணப்பட்ட பகுதிகளில் பாதுகாப்பு படையினரின் ஒத்துழைப்புடன் டெங்கு பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டன.

கடந்த 19.05.2025 தேசிய டெங்கு வாரத்தை முன்னிட்டு 3 நாள்களாக கல்முனை பிராந்திய சுகாதார சேவை திணைக்கள பணிப்பாளர் வழிகாட்டலின் கீழ் இந்த செயல் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கல்முனை மாநகர சபைக்குட்பட்ட சுகாதாரப் பிரிவில் கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் திருமதி எஸ்.எச்.இஸட்.சராப்டீன் தலைமையில் இந்த டெங்கு பரிசோதனைகள் வீடுகள் வடிகான்கள் பொது இடங்கள் என்பன பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

டெங்கு குடம்பிகள் இனங்கானப்பட்ட வீடுகளின் உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட உள்ளன.மேலும் இதன்போது வீடுகள், பாடசாலைகள், உள்ளிட்ட அனைத்து சுற்றுப்புறங்களும் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

அம்பாறை மாவட்டத்தில் நிலவும் சீரற்ற காலநிலையிலும் பொதுச்சுகாதார பரிசோதுராக்கள் சுற்றாடல் பிரிவின் பொலீஸ் அதிகாரிகள் இராணுவத்தினர் என பலரும் இப் பரிசோதனை செயற்பாடுகளில் கலந்து கொண்டனர்.

# நல்லூர் ஆலய சூழலில் அசைவ உணவகம் மூடப்பட வேண்டும்

## இந்து மக்கள் அதிர்ச்சி என சர்வதேச இந்துமத பீடம் கண்டனம்

புனித இடமாக உலகெங்கும் வாழும் இந்து மக்களால் போற்றப்படும் நல்லூர் ஆலய சூழலில் அசைவ உணவகம் அமைக்கப்பட்டிருப்பது மிகுந்த கண்டனத்திற்குரியது என சர்வதேச இந்து மத பீட செயலாளர் கலாநிதி சிவஸ்ரீ ராமசந்திர குருக்கள் பாபு சர்மா தெரிவித்துள்ளார்.

சைவத்தையும் தமிழையும் கட்டி காத்த நாவலர் பெருமான் பிறந்த இடம் அதே போல் உலகவாழ் இந்துக்களால் புனிதமாக போற்றப்படும் நல்லூர் கந்தசுவாமி வீற்றிருக்கும் இடம். அந்த வகையில் ஒருபோதும் இல்லாதவறு மாநகர சபை ஆணையாளர் அனுமதி இன்றி இந்த அசைவ உணவகம் திறந்திருக்க முடியாது.

எனவே யாழ் மாநகர சபை இதற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அதே போன்று வட மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகம் அவர்கள் சைவத்தின் மீது மிகுந்த பற்று கொண்டவர். எனவே உடனடியாக இதற்கான தீர்வை மேற்கொள்ள வேண்டும் என பாபுசர்மா தனது கண்டன அறிக்கையில் தெரிவித்துள்ளார்.




காலைக்கதிர் Kalaikkathir

# வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரிக்கு முறையற்ற அதிபர் நியமனம் வழங்கப்பட்டது

## இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டு

வவுனியாசைவப்பிரகாசமகளிர்கல்லூரியில் முறையற்ற வகையில் அதிபர் நியமனம் இடம்பெற்றுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டியுள்ளது.

இது தொடர்பாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் வவுனியா கிளையினர் அனுப்பியுள்ள செய்தி அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

வவுனியாசைவப்பிரகாசமகளிர்கல்லூரிக்கு திங்கட்கிழமையில் இருந்து புதியவர் ஒருவர் அதிபராக நியமிக்கப்பட்டுள்ளர். அவரது நியமனத்தில் பல்வேறு பொருத்தமற்ற செயற்பாடுகள் அரங்கேறியுள்ளன.

குறிப்பாக நேர்முகத் தேர்வு இன்றி வலயக் கல்விப் பணிப்பாளரின் சிபார்சின் அடிப்படையில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது. அதிபர் தெரிவிற்காக ஏற்கனவே இரண்டு நேர்முக தேர்வுகள் நடைபெற்ற நிலையில் அது தொடர்பான எந்தவிதமான வெளிப்படுதல்களும் இன்றி இந்த நியமனம் புதிதாக வழங்கப்பட்டுள்ளமை முறைகேடான ஒரு விடயமாகவே எம்மால் பார்க்க முடிகின்றது.

1சீ பாடசாலைகள் மற்றும் வகை மூன்று பாடசாலைகளுக்கு அதிபர் நியமனத்தின் போது நேர்முக தேர்வு நடத்தப்பட்ட நியமணங்கள் வழங்கபட்டு வரும் நிலையில் 1ஏபி பாடசாலைக்கு நேர்முக தேர்வை நடத்தாமல் நியமனம் வழங்கப்பட்டமை முறையற்ற செயற்பாடாகும்.

முதற் தடவையாக நடைபெற்ற நேர்முக தேர்வின் முடிவுகள் அறிவிக்கப்படாமல் இரண்டாம் முறை நேர்முக தேர்விற்கான விண்ணப்பம் கோரி அதனையும் இழுத்தடித்தமையானது குறித்த அதிபரை நியமனம் செய்வதற்கான உள்நோக்கத்தை கொண்டிருந்ததா என எமக்கு சந்தேகம் எழுகின்றது.

அத்துடன் வலயக் கல்விப் பணிப்பாளரின் தனிப்பட்ட சிபார்சினை மட்டும் அடிப்படையாகக் கொண்டு கல்விச் செயலாளரால் நியமனம் வழங்கப்பட்டமையானது வலயக்கல்வி பணிப்பாளரின் தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்கு இடமளிக்கும் நிலைமையை ஏற்படுத்தி உள்ளது.

தற்போதைய பிரதமர் அண்மையில் வவுனியாவில் கலந்து கொண்ட நிகழ்வொன்றில் கருத்து தெரிவிக்கும் போது பாடசாலைகளுக்கான அதிபர் நியமணங்கள் நேர்முகத்தேர்வின் அடிப்படையிலேயே வழங்கப்படும் என குறிப்பிட்டிருந்தமையும் நாம் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம் என்று குறித்த அறிக்கையில் உள்ளது. 100

# குண்டும் குழியுமாக காணப்படும் வீதியைப் புனரமைப்பது யார்?

(பாறுக் ஷிஹான்)

கல்முனை மாநகர சபைக்குட்பட்ட பெரிய நீலாவணை முதல் நிந்தவூர் வரையிலான பொதுமக்கள் இக்கரையோர பாதையை அன்றாடம் பயன்படுத்தி வருகின்றனர்.

அம்பாறை மாவட்டத்தில் அமைந்துள்ள இக்கரையோர பாதையானது பாண்டிருப்பு எல்லை வீதி கரையோர வீதியுடன் இணையும் பகுதியில் இருந்து குண்டும் குழியுமாகக் காணப்படுகின்றது.

இதனால் இவ்வீதியால் பயணம் மேற்கொள்ளும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக ஊடகங்களிடம் தெரிவித்தன.

இது தவிர, இவ்வீதி ஊடாக அன்றாடம் அரச ஊழியர்கள் தனியார் ஊழியர்கள் பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட





பல்வேறு தரப்பினர் பயணம் செய்வதைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

மழை காலங்களில் இவ்வீதி சேறும் சகதியுமாக காணப்படுவத0 ஜுல் இவ்வீதியால் செல்கின்ற மீனவர்கள் பல்வேறு விபத்துகளுக்கு முகம் கொடுப்பதாகவும் சுட்டிக்காட்டுகின்றனர்.

எனவே உரிய அதிகாரிகள் இவ்விடயத்தில் கவனம் செலுத்துமாறு பொதுமக்கள் வேண்டுகோள் விடுகின்றனர்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 22.05.2025இல் வெளியிடப்பெற்றது